பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 23 புதன்கிழமை (08.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 14

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு:

# எஸ்.பி.திஸநாயக்காவுக்கு 2 ஆண்டுக் கடூழியச் சிறை!

## நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் இழந்தார் ஒன்பது வருடங்களுக்கு அரசியல் அந்தகாரம்

கொழும்பு,டிசெம்பர்8



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகரும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள்அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்காவுக்கு உயர்நீதிமன்றம் இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தது. அவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இத்தீர்ப்புக் காரணமாக அவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

இக்குற்றத்தீர்ப்புக் காரணமாக அடுத்த ஒன்பது ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலிலும் போட்டியிடவோ, வாக்களிக்கவோ உள்ள தகைமையையும் அவர் இழந்துள்ளார். அதனால் அவரது அரசியல் வாழ்வு அடுத்த ஒன்பது ஆண்டுகளுக்கு அந்தகார இருளில் மூழ்கியிருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் குழுவே நேற்று முற்பகல் 10.45 மணிக்கு இத்தீர்ப்பை ஏகமானதாக வழங்கியது. நீதியரசர்களான கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா, டீ.பி.வீரசூரிய, நிமால் திஸநாயக்க, ராஜா பெர்னாண்டோ ஆகியோர் மற்றைய நீதியரசர்களாவர்.

பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்பை மற்றைய நால்வரும் ஏற்பதாக அறிவித்தனர். கடந்த ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி ஹபராதுவவில் நடைபெற்ற ஏர்பூட்டு விழா ஒன்றில் உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் உரையாற்றினார் என எஸ்.பி. திஸநாயக்காவுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்புக்காக எஸ்.பி.திஸநாயக்க நேற்று உயர்நீதிமன்றுக்கு வந்திருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.கட்சி மௌனம்

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர் எஸ்.பி. திஸநாயக்காவிற்கு இருவருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில் உடனடியாக கருத்து எதனையும் வெளியிட முடியா தென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்தது.

ஐ.தே.கவின் நேற்றைய செய்தியாளர் மாநாட்டின்போது கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந்தத் தீர்ப்பு சம்பந்தமாக கட்சி ஆராய்ந்து வருவதால் உடனடியாகப் பதில் எதனையும் வெளியிட முடியாதென்று கூறினார்.

## அரசுக்குள் பெரும் கொள்கை முரண்பாடு அதனால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறி!

### போர் வெடிக்கும் ஆபத்து என எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,டிசெ.8

சமாதான முயற்சிகளின் அடிப்படையாகக் கருதப்படும் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசின் கொள்கை முரண்பாடு காரணமாகப் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றது என முன்னெச்சரிக்கை செய்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

சட்டபூர்வமற்ற முறையில் அரசமைப்பை அரசு உருவாக்கினால் நாட்டின் வரலாற்று ரீதியான அரசமைப்பு உட்கட்டமைப்பு பெரும் சவாலை எதிர்நோக்க நேரிடுமென்றும் அது சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்றபோது கட்சியின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு விளக்கினார் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க. பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்க ஐ.தே.க. முன்வந்தபோதும், அதனைத் தட்டிக் கழிக்கும் ஜனாதிபதியின் செயற்பாடு அவரின் தனிப்பட்ட அரசியல் அவாவை அப்பட்டமாக வெளிப்படுத்துவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் கூறியதாவது :-

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிக் கொண்டே போகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரசியல் அலுவலகம் மீது நேற்றுக் கைக்குண்டு வீச்சு!

ஏறாவூர்,டிசெ.8

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பணிமனைமீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் மீண்டும் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகாலை 1.25 மணியளவில் அரசியல் பணிமனைமீது தொடர்ச்சியாக நான்கு கைக் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. சம்பவம் இடம் பெற்றவேளை புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் இந்த அலுவலகத்தில் தங்கியிருந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத் தாக்குதலுக்கு புலிகள் கடும் கண்டனம்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பணிமனைமீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பொழுது மட்டு.நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறனும் மற்றும் நகரத்தில் அரசி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் நேற்று மகேஸ்வரன் அட்டகாசம்!

ஐ.தே.க. பிரமுகர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு உயர் நீதிமன்றம் இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்த விவகாரம் நேற்றுமாலை நாடாளுமன்றத்தில் பெரும் களேபரத்தை ஏற்படுத்தியது.

நேற்று சுற்றாடல், வனவள அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதம் நடந்துகொண்டிருந்த சமயம் மேற்படி தீர்ப்புத் தொடர்பாக ஐ.தே.கட்சியின் எம்.பியான ராஜித சேனாரத்ன சர்ச்சை ஒன்றைக் கிளப்பினார்.

இந்தக் குற்றத் தீர்ப்பு திட்டமிடப்பட்ட ஓர் அரசியல் பழிவாங்கல் தீர்ப்பு. வெளிவர முன்னரே அதன் விவரத்தை ஆளும் தரப்பின் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பகிரங்கமாக அறிவித்துவிட்டார். இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இவ்வாறு வாய்மூல உரைக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டதாகச் சரித்திரம் இல்லை. இது திட்டமிட்டப்பட்ட நடவடிக்கை என்றெல்லாம் ராஜித கூறினார்.

அதனை ஆளும் கட்சியினர் ஆட்சேபித்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் பங்கு, பணியை வரவேற்கிறார் பிரிட்டன் தூதர்

கொழும்பு.டிசெ.8

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளராகவும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளராகவும் பணியாற்றும் நோர்வே நாட்டின் பணிகளுக்கு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் கொலைகள், ஆள்கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் நிறுவனங்கள் அமைப்பின் பிரதிநிதிகளைப் பிரிட்டிஷ் தூதுவர் ஸ்டீபன் ஈவான் நேற்று கொழும்பில் சந்தித்தார்.

பிரிட்டிஷ் தூதரகத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பின்போது இலங்கையில் போர்நிறுத்தம் நீடிப்பதைத் தூதுவர் வலியுறுத்தினார்.

இலங்கைத் தீவில் சகல மக்களின் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படும் விதத்தில் யுத்த நிறுத்தம் பேணப்படவேண்டும். நாட்டின் சகல சமூகத்தின் தேவைகளையும் பூர்த்திசெய்யும் விதத்தில் சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவேண்டும் - எனவும் பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்தார்.

## இந்தியத் தூதரகம் முன்பாக பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,டிசெ.8

புகழ்பெற்ற ஹிந்தி நடிகர் ஷாருகானின் களியாட்ட நிகழ்வை இருநாள்கள் தள்ளிவைத்துக் கொள்ளுமாறுகோரி நேற்று இந்தியத் தூதரகத்துக்கு முன்பாகப் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கங்கொடவில சோமதேரர் பவுண்டேசன் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குசெய்திருந்தது.

எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் காலஞ்சென்ற வண.கங்கொடவில சோமதேரரின் ஞாபகார்த்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதேதினங்களில் ஏற்கனவே தீர்

(16ஆம் பக்கம் பார்க்க)



பெண்மான் போன்ற அப்பாவித்தனம்

டிசம்பர் மாதத்தில் ரூபா. 10,000/- அல்லது அதற்குக் கூடிய தொகையை உங்கள் ஸ்திரி கணக்கில் வைப்பு செய்தால் வருட முடிவில் நடக்கும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் கீழ்க்காணும் பரிசுகளைப் பெற உரிமை பெறுவீர்கள்.

1. முதலாம் பரிசு - ரூபா.100,000/-
2. இரண்டாம் பரிசு - ரூபா.50,000/-
3. மூன்றாம் பரிசு - ரூபா.25,000/-

NSB



யாழ். மாவட்டத்தில் நூற்றாண்டு அபிவிருத்தி இலக்கை சமுதாயப்படுத்துவது தொடர்பான பயிற்சிப்பட்டறை நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. பயிற்சிப் பட்டறையில் பிரதிப்பணிப்பாளர் வி.சிவஞானசோதி உரையாற்றுவதையும் - அருகில் சர்வதேச நாணய நிதிய சிரேஷ்ட பிரதிநிதி ஜெமினிகார்ட்டர், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மிலேனியம் அபிவிருத்தித் திட்டப்பணிப்பாளர் டாக்டர் ஏ.சக்திவேல் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் - பட்டறையில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தீபன்)*

## திருக்குறள் மனனத்தில் முதலிடம்பெற்ற மாணவிக்கு விசேட பரிசில்



யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்வி வலயத்தினால் யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டியில் கீழ்ப்பிரிவில் கலந்துகொண்டு அதிகூடிய குறட்பாக்களை மனனம் செய்து ஒப்புவித்த ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை மாணவி க.கஜவாணி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அதிகூடிய குறட்பாக்களை மனனம் செய்து ஒப்புவித்தமைக்காக இவருக்கு விசேட பரிசில் வழங்கப்படவுள்ளது. நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் இவருக்கான பரிசில் வழங்கப்படும். (10)

# 'சக்தி' யின் யாழ். அலுவலகம் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு,டிசெ.8

'சக்தி'யின் யாழ். அலுவலகம் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டமையை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயமாக மேற்படி இயக்கம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பு வருமாறு:-

சக்தி, சிரச, எம்.ரி.வி. வலையமைப்பின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல் என சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியின் வீரசிங்கம் மண்டபத்தில இரண்டாவது மாடியில் இயங்கும் இந்த ஒலிபரப்பு மத்திய நிலையத்திற்குள் கடந்த ஆறாம் திகதி இரவு 9.10 மணியளவில் திடீரெனப் புகுந்த குழுவொன்று அதனை முழுமையாகத் தாக்கி அழித்துள்ளது. இச்சம்பவத்தினால் ஏற்பட்ட சேதம் பத்து மிலலியனுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒலிபரப்பு சேவை நிலையம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. தாக்குதலினை நடத்தியவர்கள் இதுவரை அடையாளங்காணப்படவில்லை. அத்துடன், அவர்கள் சுதந்திரமாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் காரணமாக எம்.ரி.வி. - எம்.பி.சி. வலையமைப்பின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமன்றி, அதற்கு மேல் யாழ்.மக்களுக்குத் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்விரு சம்பவத்தினையும் முன்வைத்தே சுதந்திர ஊடக இயக்கம் இதனைக் கண்டித்துள்ளது. அத்துடன், இந்த ஜனநாயக விரோத செயல் தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமாறும், யாழ்ப்பாணத்தில் எம்.ரி.வி. -எம்.பி.சி. வலையமைப்பிற்கு இச்சேவையை கொண்டு நடத்துவதற்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் அரசிடம் கோருகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

## வெள்ளப் பாதிப்பு விவரங்களை யாழ். செயலகம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களை யாழ். செயலகம் திரட்டிவருகின்றது. கடந்த இரு மாதங்களாகப் பெய்துவரும் மழையினால் வீடுகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள், மரங்கள் முறிதல் போன்ற பல்வேறு பாதிப்புக்களைப் பிரதேச செயலகங்கள் ஊடாகத் திரட்டுவதற்கான நடவடிக்கையை யாழ் அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

மழை தொடர்ந்து பெய்துவருவதனால் முழுமையான தகவலைத் திரட்ட முடியாதுள்ளதெனவும் -

விவரங்கள் முழுமையாகக் கிடைக்கப் பெற்றதும் அவற்றுக்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் - செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (3-202-203)


## கலாசாரமண்டப அடிக்கல் நடுகை வேறுதினத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

இன்று நடைபெறவிருந்த கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தவிர்க்க முடியத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும்-

அடிக்கல் நடும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ-13)



யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பீற்றர் சாக்கின் பொது விரிவுரைத் தொடர் யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

இதில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சார்க் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# பொடா சட்டத்தை ரத்துச்செய்யும் பிரேரணை இந்திய மக்களவையில் நிறைவேற்றம்!

## பா.ஜ.க. அவையை விட்டு வெளிநடப்பு

புதுடில்லி,டிசெ.8

'பொடா' (தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தை) சட்டத்தை ரத்துச் செய்யும் பிரேரணை இந்திய மக்களவையில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப் பட்டது. இதையடுத்து, 'பொடா' சட்டத்திற்கு அதிகாரபூர்வமாக முடிவுகட்டப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் மக்களவையை விட்டு வெளிநடப்புச் செய்தன.

அதேநேரத்தில், 'பொடா' சட்டத்திற்குப் பதிலாக அதிக அதிகாரம் அளிக்கும் "சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் திருத்தப்பிரேரணை" இல் உள்ள குறைகளை நீக்குவதற்கு, அப்பிரேரணையை நாடாளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பவேண்டும் என தி.மு.க. கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

'பொடா' சட்டத்தை ரத்துச் செய்வதற்கான பிரேரணை மீதான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை மக்களவையில் ஆரம்பித்து, நேற்றுமுன்தினம் முடிவுற்றது.

பா.ஜ.க., ஐக்கிய ஜனதா தளம், பிஜு ஜனதா தளம் உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் 'பொடா' சட்டத்தை ரத்துச் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

அரசியல் நிர்ப்பந்தங்களுக்காக, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நாட்டின் பாதுகாப்பில் சமரசம் செய்யத் தவறிவிட்டதாகவும், காங்கிரஸ் கட்சி ஆட்சிசெய்யும் மாநில அரசுகள் கூட 'பொடா' சட்டத்தைப் பயன்படுத்துகின்றன என்றும், அக்கட்சிகள் சுட்டிக்காட்டின.

ஆனால், பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி செய்யும் குஜராத் மாநிலத்தில்தான் இச்சட்டம் பழிவாங்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டதாகவும், பெருமளவில் முஸ்லிம்கள்தான் இச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனவும் ஆளும் கூட்டணிக் கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இச்சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படும் என்பதால்தான் ஆரம்பத்திலேயே இதனை எதிர்த்ததாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மக்களவையில் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என இரு தரப்பினர்களுமே வைகோ கைதுசெயயப்பட்ட விவகாரத்தைத் தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொண்டனர்.

இவ்விடயம் குறித்து தி.மு.க. உறுப்பினர் ஏ. கிருஷ்ணசாமி உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இச்சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படும் என தி.மு.க. அச்சம் தெரிவித்தது. அவ்வாறு எதுவும் நடைபெறாது என அப்போது அத்வானி உறுதியளித்தார். ஆனால், முதல்வர் ஜெயலலிதாவின் அரசு வைகோவை 525 நாள்களுக்கு மேல் 'பொடா' சட்டத்தின்கீழ் சிறையில் அடைத்தது.

அத்துடன், பத்திரிகையாளர் நக்கீரன், பழநெடுமாறன் ஆகியோரையும் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைக்காக இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்தது தமிழக அரசு. இச்சட்டத்தை ரத்துச் செய்ததன் மூலம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழக மக்களைக் காப்பாற்றி விட்டது என்றார்.

அதேவேளை, "சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் திருத்தத்தில்", 'பொடா' வழக்குகளை ஆய்வுசெய்யும் மறு ஆய்வுக் குழுக்களுக்கு, வழக்கைத் திரும்பப்பெறுதல் உட்படக் கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய நிவாரணம் வழங்கவேண்டும் - என்றும் இவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

பின்னர் 'பொடா' சட்டத்தை ரத்துச் செய்யும் பிரேரணையும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திருத்தப் பிரேரணையும் மக்களவையில் நிறைவேற்றப்பட்டன. (க-10)

உலக அரங்கில்

## பலஸ்தீனப் பிரச்சினை குறித்த சர்வதேச மாநாடு லண்டனில்

லண்டன்,டிசெ.8

பலஸ்தீனப் பிரச்சினை குறித்த சர்வதேச மாநாடு லண்டனில் அடுத்த ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டுக்கு அமெரிக்கா அனுசரணை வழங்கியுள்ளது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளின் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கு இஸ்ரேல் தமது பிரதிநிதிகளை அனுப்புமா எனத் தெரியவில்லை.

அடுத்தமாதம் ஜனவரி 9ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த மாநாடு நடைபெறும். இஸ்ரேல் சிறையில் உள்ள மார்வன் பர்சோதி இத்தேர்தல் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் இம்மாநாடு நடைபெறாது என இஸ்ரேலிய வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)

# சீன நிலச்சரிவில் 32 பேர் மரணம்!

பெய்ஜிங்,டிசெ.8

சீனாவில் நிலக்கரிச் சுரங்கங்கள் அமைந்துள்ள மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதில் 25 வீடுகள் புதையுண்டு 32பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் தென்மேற்குப் பகுதியில் உள்ள குய்சோ மாகாணத்திலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. மலைச்சரிவில் இருந்த 25 வீடுகள் மீது மிகப்பெரிய பாறைகள் சரிந்து வீழ்ந்ததில் அந்த வீடுகள் தரைமட்டமாயின.

இரவு வேளையிலேயே இந்த நிலச்சரிவு ஏற்பட்டதால் பெரும்பாலானவர்கள் தூக்கத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

32பேர் அந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர் என சீனத் தொலைக்காட்சி ஒன்று தெரிவித்தது. 12 பேரைக் காணவில்லை எனவும் அது மேலும் தெரிவித்தது.

மலையைச் சுற்றியுள்ள சுரங்கங்கள் தோண்டப்படுவதால்தான் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாக நகரவாசிகள் தெரிவித்தனர். இந்த அனர்த்தத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (க-10)

### ஆள்கொணர்வு வழக்குகளில் பதில் அளிக்க

# ராஜபக்ஷவுக்கு மேல்நீதிமன்றம் ஜனவரி 5 வரை இறுதி அவகாசம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பான ஐந்து ஆட்கொணர்வு வழக்குகளில் எதிர் மனுதாரரான மரணதண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ பதில் அளிக்க இறுதித் தவணை ஒன்று யாழ். மேல்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் காணாமற்போனவர்களான செ.நந்தகுமார்(புத்தூர் கிழக்கு), பூ.யதீஸ்குமார் (புத்தூர் கிழக்கு), பரமு சந்திரசேகரம்(கொய்யாத்தோட்டம்), சு.சுதாகரன் (அரியாலை), நா.செல்வரத்தினம்(அரியாலை), லோ.சேரன்(அரியாலை) ஆகியோர் தொடர்பான ஆட்கொணர்வு வழக்குகள் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் எடுக்கப்பட்டன. இவர்கள் காணாமற்போன காலப்பகுதியில் அரியாலை முகாமில் கடமையாற்றிய லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

தமது ஆட்சேபனையைச் சமர்ப்பிக்க மேலும் அவகாசம் வழங்கவேண்டும் என்று அப்போது ராஜபக்ஷ நீதிபதியிடம் கோரினார்.

பல தவணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தவணை வழங்கமுடியாது என்று - தெரிவித்த நதிபதி, இறுதித் தவணையாக ஜனவரி மாதம் 5ஆம் திகதி வழங்குகிறேன் என்று கூறினார்.

இந்த வழக்குகளில் ஏனைய எதிர் மனுதாரர்களான முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, அரியாலை முகாம் பொறுப்பதிகாரி கப்டன் லலித்குமார ஆகியோர் சார்பில் ஆட்சேபனைகளை அரச சட்டத்தரணி சமர்ப்பித்தார்.

வழக்கை நீதிபதி அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

காணாமற்போனோர் சார்பில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய சட்டத்தரணி எம்.றெமீடியஸ் ஆஜரானார். (ஐ-3)

## மீனின் விலை உயர்வு

குருநகர்,டிசெ.8

குருநகர், சின்னக்கடைப் பொதுச் சந்தை மற்றும் கொட்டடி மீன்சந்தை ஆகியவற்றின் மீன் விலை மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது. இச்சந்தைகளில் வந்துசேரும் மீனின் அளவு குறைவாக உள்ளதால் விலை உயர்வு காணப்படுகிறது.

தொடர்ந்து பெய்த கடும்மழை மற்றும் குருநகரில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக மீனவர்கள் பலர் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லாமையே மீனின் விலை உயர்வுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரத்தில் மாட்டிறைச்சி தற்போது கிலோ இருநூறு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் கிடைப்பது அரிதாக உள்ளமையே இவ்விலை உயர்வுக்குக் காரணம் என இறைச்சிக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (10-51)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.8

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையாவின் சேவை நலன் பாராட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

## கல்விச் சேவைத் திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306பி, இலங்கை பிராந்தியம் இரண்டும், வலயம் ஒன்றும், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து இன்று புதன்கிழமை பகல் 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்விசார் சேவைத்திட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் கௌரவிருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் கே.தனபாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக லயன் ஜே.முத்துக்குமாரசாமி, லயன் எஸ்.சிவநேசன், லயன்.கே. இராசதுரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-7)

# இரண்டாயிரத்து 227 குடும்பங்கள் தென்மராட்சியில் மழையால் பாதிப்பு

தென்மராட்சி,டிசெ.8

தென்மராட்சி பிரதேசத்தில் மழை வெள்ளத்தினால் 2ஆயிரத்து 227 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 767 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கடந்த 6ஆம் திகதிவரை கிடைத்த சில கிராம அலுவலர்களின் அறிக்கைகளின் பிரகாரம் மேற்படி குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை பெய்த கடும் மழையினால் பிரதேசத்தின் பெரும் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்வையிட்ட பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

577வீடுகள் பகுதியாகவும் 185 வீடுகள் முற்றாகவும் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களிலேயே வெள்ள அனர்த்தத்தினால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் காலபோக நெற்செய்கை, மேட்டு நிலப் பயிர்ச்செய்கை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. (ஐ-117)

# மோட்டார் சைக்கிளுடன் மன்னார் வந்த ஈழ அகதி

### நீதிமன்ற உத்தரவில் காவலில்

மன்னார்,டிசெ.8

தமிழகத்தில் இருந்து மன்னார் திரும்பிய அகதி ஒருவர் தம்மோடு மோட்டார் சைக்கிள் ஒன்றையும் எடுத்துவந்தார். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி மன்னார் நீதிவான எம்.அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் இருந்து 13 அகதிகள் வள்ளங்கள் மூலம் நேற்று மன்னார் வந்து சேர்ந்தனர். அவர்களில் 12 பேர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள், ஏனையவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

அகதிகள் யாவரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் தமிழகப் பதிவுகளுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றை எடுத்து வந்துள்ளார் என பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு ஏனையோரை நீதிவான் விடுவித்தார். (ஐ-3)

# பண்டத்தரிப்பு கூ.சங்கத்தில் பங்கீட்டு அடிப்படையில் மா

வலி.தென்மேற்கு,டிசெ.8

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருகோணமலையிலிருந்து(பிறிமா ஆலையிலிருந்து) லொறி மூலம் மா எடுத்துவரப்பட்டதை அடுத்து சங்கக் கிளைகள் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மா விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தில் மா வழங்கப்படவில்லை. மாவுக்குப் பதிலாக அரிசி போன்ற வேறு பொருள்கள் நிவாரணத்துக்கு வழங்கப்பட்டன. தற்போது சங்கத்திற்கு மா வந்துசேர்ந்துள்ளதால் இனி நிவாரணம் பெறுபவர்களுக்கு மாவும் வழங்கப்படவுள்ளதாக சங்கப் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதர் தெரிவித்தார்.

இதேவேளை -

இப்பகுதியிலுள்ள தனியார் கடைகளில் மாவுக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதாகக் கூறப்படுகின்றது. சில கடைகளில் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் இரண்டு கிலோ மா விநியோக்கிக்கப்பட்டு வருகின்றது.

மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் இப்பகுதியில் பாண் விற்பனை அதிகரித்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. (ஐ-135)



மக்கள் வங்கியில் சிறுவர்களுக்கான சிசு உதான கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கு வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் திருமதி தவமணி கணேசலிங்கம் பரிசில் வழங்குவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர் பி.கிருஷ்ணானந்தம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)*

# புதிய சாரதி அனுமதிப்பத்திர புத்தகம் இன்னும் வரவில்லை

### விண்ணப்பித்த பலர் ஏமாற்றம்

வலி.தென்மேற்கு,டிசெ.8

முன்னர் தமக்கு வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் புத்தகத்துக்குப் பதிலாக புதிய வடிவிலான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக (புதுப்பித்துக் கொள்வதற்காக) கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர் பலருக்கு விண்ணப்பித்து ஒரு வருடமாகியும் இதுவரை புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1982 ஆம் ஆண்டில் தாம் பெற்ற மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்து புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காகப் பண்டத்தரிப்பைச் சேர்ந்த அரச ஊழியர் ஒருவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு ஊடாகக் கடந்த 2003 ஆம் அண்டு ஜூன் மாதத்தில் விண்ணப்பித்திருந்தார். இதற்கான ஆவணங்கள், புகைப்படம் மற்றும் கட்டணத்துடன் விண்ணப்பம் அனுப்பியவருக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தங்கள் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் புத்தகத்திற்குப் பதிலாகப் புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக முறைப்படி விண்ணப்பித்த மற்றும் பலருக்கும் நீண்டகாலமாகியும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் வீதிகளில் பொலீஸாரின் பரிசோதனையின் போது இவர்கள் பெரும் அவஸ்தைப்படுவதாகவும், சிலசமயம் குற்றப் பணம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-135)

# சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் மேலும் திட்டங்களுக்கு நிதி உதவி

தென்மராட்சி,டிசெ.8

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மேலும் சில வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதி, உதயசூரியன் சனசமூக நிலையப் புனரமைப்பு மற்றும் தளபாடக் கொள்வனவுக்கு 45 ஆயிரம் ரூபாவும்-

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை, புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையப் புனரமைப்பு வேலைக்கு 25ஆயிரம் ரூபாவும் -

மீசாலை சோலையம்மன் ஐங்கரன் முன்பள்ளி திருத்தவேலைக்கு 25ஆயிரம் ரூபாவும்-

மீசாலை மலைமகள் சனசமூக நிலைய நிர்மாண வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும் -

நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையக் கட்டடத் திருத்தவேலைக்கு 75 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சாவகச்சேரி கச்சாய் வீதி, குழந்தை யேசு முன்பள்ளி, சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை, சங்கத்தானை நாமகள் முன்பள்ளி ஆகியவற்றுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய நிதி வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஐ-117)

# நெடுந்தீவு மேற்குப் பிரதேசத்திற்கு மின் விநியோக விஸ்தரிப்பு இல்லை

### பிரதேச மக்கள் கவலை தெரிவிப்பு

நெடுந்தீவு மேற்குப் பிரதேசத்துக்கான மின் விநியோக விஸ்தரிப்புக்காக மின்சார சபையிடம் ரூபா பத்து லட்சம் வழங்கப்பட்ட போதும் விஸ்தரிப்புக்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையென்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பின்தங்கிய கிராம அபிவிருத்திக்கான நிதி உதவித் திட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டில் நெடுந்தீவு பிரதேச சபை மேற்படி தொகையை வழங்கியிருந்தது.

பணம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் காரைநகர் - ஊர்காவற்றுறைப் பகுதிக்கான மின்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான வேலைகள் தாமதமடைவதாகக் கூறி இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக நெடுந்தீவு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேச சமயம், நெடுந்தீவு மேற்குப் பிரதேச மக்கள் தமது பகுதியில் எவ்விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர். (10-111)

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் தயாரிப்பதற்குரிய பின்வரும் பொருள்கள் விற்பனைக்குண்டு.

1. கொம்பிரெசர் வாத்
2. மோட்டார் என்ஜின்
3. குளிர்சாதனப் பெட்டி - 03
4. கடைகளுக்குரிய தளபாடங்கள்
5. ஐஸ்கிறீம் விற்பனை வாகனங்கள் - 02

தொடர்பு:

**வரதாஸ் ஐஸ்கிறீம்**

பிரதான வீதி, சங்கானை.

(39400) (24-17-45)



## புதிய வகுப்புகள்

**இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவில்**

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டச்சு, தையல் வகுப்பு மற்றும் முன்பள்ளி மாணவர்களை அனுமதித்தல்.

மேற்படி பயிற்சி நெறிகளுக்குப் புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முடிவுதிகதி: **27.12.2004**

அனுப்பவேண்டிய முகவரி:

***மக்கள் நலன் காக்கும் பிரிவு,***

**இருபாலைச் சந்தி,**

**கோப்பாய்.** (39401) (24-17-45) - நிர்வாகம்.



## காசாளர், சப்ளையர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது மிகப் பிரபலமான (Hotel / Restaurant) இற்கு முழுநேர, பகுதிநேர காசாளர் மற்றும் முழுநேர சப்ளையர்கள் தேவை. நகரை அண்டிய பிரதேசத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தேவையான ஆவணங்களுடன் 10.12.2004 வெள்ளிக்கிழமை ஒரு மணிமுதல் 3 மணிக்குள் நேடியாகச் சமுகமளிக்கவும்.

**கொசீ உணவகம் / தங்ககம்**

**15, சிறாம்பியடி ஒழுங்கை (off stanly Road),**

**யாழ்ப்பாணம்.**

(39395) (24-19-45)


# யாழ். மாவட்ட மாணவர்களின் திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ். கல்விப் பணிமனையினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப்போட்டியில் பங்குபற்றிச் சான்றிதழ் பெறும் மாணவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. சான்றிதழ் பெறுவோர் விவரம் வருமாறு:-

### கீழ்ப்பிரிவு

க.கஜவாணி (ஏழாலை புனித இசிதோர் றோ.க.வி.), க.அபிராமி (ஏழாலை புனித இசிதோர் றோ.க.வி.), அ.ஜீவராசா (பெரியவிளான் றோ.க.பா), கெ.காயத்திரி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.), க.யஸ்மிதா (மல்லாகம் கனிஷ்ட வித்தி.)

சி.லக்சிகா (தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), சி.றஜீபன் (கல்வியங்காடு இ.த.க.பா.), ச.கிரிசாந் (சென். ஜோன்ஸ் கல்லூரி), த.பிரவீணன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.), அ.விேனாசன் பிரசிடன் (பற்றிக்ஸ் கல்லூரி).

ஸ்ரீ.பிரணவி (சென். ஜோண் பொஸ்கோ), தி.குணவரன் (சென். ஜோண் பொஸ்கோ), மோ.சோபிதன் (இந்து ஆரம்பப் பாடசாலை), இ.யாழினி (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), க.யசிந்தா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

யோ.சங்கீதா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), பா.கஜானன் (புனித ஜோண் பொஸ்கோ வித்தி.), பு.பிரியங்கா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தி.), க.மதுரா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ச.சக்திதர்சினி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.) -

ஜெ.ஜானகி (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஜெ.வியாந் (கொக்குவில் ஸ்தான சி.சி.த.வித்தி.), ச.சாரங்கவி (புனித ஜோண் பொஸ்கோ வித்தி.), சி.பிரணவி (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சு.கனிமொழி (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

க.சிதம்பரபாணன் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.), இ.மயூரி (புனித மரியாள வித்தி.), சி.ராகுலன் (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), ச.நினுஜா (நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.) இ.றக்சாயினி (கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி.), ஜெ.லக்சன் (கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி.).

### மத்திய பிரிவு

யோ.சாண்யா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.கௌசல்யன் (பரி.யோவான் கல்லூரி), க.விதுஷா (புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தி), பா.கீர்த்திகா (புனித மரியாள வித்தி), ம.ஸ்னோஜன் (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி);

ச.சக்திதாயினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இ.தாரணி (சன்மார்க்க ம.வி.), கு.தமிழினி (ஆவரங்கால் மகாஜனா வித்தி.), க.தனுசா (சன்மார்க்க ம.வி.), செ.இமாகிளேற் (சென்.ஜேம்ஸ் பெண்கள் வித்தி.), க.மீரா (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.) ப.லக்ஷி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), க.கஸ்தூரி (இடைக்காடு ம.வி.), சு.ஆன்யூலினி (பாஷையூர் சென். அன்ரனீஸ் வித்தி.), க.உதயபிரகாஷ் (அனலைதீவு சதாசிவம் ம.வி.) -

கு.கீர்த்திகா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), இ.நிவாசன் (கெருடாவில் இ.த.க. பாடசாலை), சி.ரேணுகா (சன்மார்க்க ம.வி.), இ.சாயினி (நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை); ச.பகிர்தா (நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை) -

ம.ரெக்ஸ்ரெலா (பாஷையூர் சென். அன்ரனீஸ் வித்தி.), ஜீ.ஜனார்த்தராஜ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), சு.நரேஸ் (மத்திய கல்லூரி), செ.தாரணி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.), பா.பிருந்தா (இடைக்காடு ம.வி.), சி.ஜெனனி (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), ஜெ.கெஜ உசாநதினி (புனித மரியாள் வித்தி.), யோ.கீர்த்திகா (பிரான்பற்று கலைமகள் வித்தி.), இ.மேரிசாளினி (பாஷையூர் சென். அன்ரனீஸ் வித்தி.), ப.சௌமியா (இடைக்காடு ம.வி).

### மேற்பிரிவு

ம.குீப்பிரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ச.தாரணி (அத்தியார் இந்துக் கல்லூரி), ச.சர்மிளா (சன்மார்க்க ம.வி.), சு.சுகிர்தா (புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தி.), ஆ.திலீபன் (சென்.சாள்ஸ் ம.வி.), பா.செல்லோமி (ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தி.)-

மு.சிந்துஜா (பிரான்பற்று கலைமகள் வித்தி.), சி.சஜீவன் (சென்.ஜோண்ஸ் கல்.); பா.ரஜனி (கோப்பாய் ம.வி.), அ.கஜேந்தினி (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.), பே.ராஜ்குமார் (யாழ். மத்திய கல்லூரி), வி.தேவகௌரி (ஊர்காவற்றுறை சென்.அ.ம.), கு.கௌசிகன் (யாழ். மத்திய கல்லூரி), கு.டியூற்றா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி). (3-204)


## ஓராண்டு நீங்காத நினைவலைகள்

அன்னை மடியில் 20 - 04 - 1979



காலனவன் மடியில் 08 - 12 - 2003

**சாள்ஸ் இந்திரன் விமலேந்திரா**

*(பல்கலைக்கழக இறுதி வருட மாணவன்)*

சீறிவரும் புயலினிலும் இந்திரனே!
உன் சிரித்த முகம் தெரியுதையா!
மாறிவரும் வாழ்வினிலும் இந்திராவே!
உன் மலர்ந்த முகம் தெரியுதையா!
காற்றடிக்கவும் இல்லை கடல் பொங்கவும் இல்லை
அலைபாயவும் இல்லை, புயலடிக்கவும் இல்லை - ஆனால்
உன்னைக் காப்பாற்ற முடியல்ல - இந்திரனே!

18. புதுமை மாதா கோயில் மேற்கு வீதி.
யாழ்ப்பாணம். (39402)(26)

ஏங்கித் தவிக்கும்:
*சித்திரன் மாமா,*
*தேவா அன்ரி, பிள்ளைகள்.*



சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

We Serve மாவட்டம்: 306B - இலங்கை பிராந்தியம்: 11 - வலயம் -1

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

**நடத்தும் கல்விசார் சேவை**

சண்டிலிப்பாய்க் கோட்டத்தில்
2004ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில்
பரீட்சையில் சித்தி எய்திய
மாணவர்களை ஊக்குவிக்கும்

**பாராட்டு வைபவம்**

காலம்: **இன்று (08.12.2004) புதன்கிழமை பி.ப. 2.30**
இடம்: **யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

பிரதம விருந்தினர்:
**லயன் கலாநிதி K.குணராசா** அவர்கள்
*(யாழ். மாநகர ஆணையாளர்)*
லயன் சீமாட்டி கமலாம்பிகை குணராசா

கௌரவ விருந்தினர்கள்:
**திருமதி றெஜினா இருதயநாதன்**
*(கல்விப் பணிப்பாளர் - வலிகாமம் வலயம்)*
**திரு. K.தனபாலசிங்கம்** அவர்கள்
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - சண்டிலிப்பாய்)*

சிறப்பு விருந்தினர்:
**லயன் K.இராசதுரை**
*(மாவட்டத் தலைவர் - கல்வி)*
பிராந்திய தலைவர்
லயன் **J.முத்துக்குமாரசாமி** அவர்கள்
வலயத் தலைவர்
**S.சிவன்நேசன்** அவர்கள்

மானிப்பாய் வட்டப் பெரியோர்களை இவ்வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் சி.பொன்னம்பலம் - கழகத் தலைவர்
லயன் C.சுந்தரேஸ்வரன் - கழகச் செயலாளர்
லயன் S.S.தங்கராசா - சேவை இணைப்பாளர்.

(சி-39737) (42-19-45-24)



## நினைவலையில் ஓராண்டு

அன்னை மடியில் 12 - 05 - 1944



ஆண்டவன் அடியில் 19 - 11 - 2003

அமரர்

**மயில்வாகனம் பாலகுமார் J.P.**

**(முன்னாள் உதயன் ஊழியர்)**

*திதி : 08.12.2004*

ஆலயங்கள் வேண்டி எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்
கொண்டு ஓராண்டு ஓடினும்
எம் மனதை விட்டகலாமல் வாழும் அப்பாவே!
பலகோடி பிறவிகள் எடுத்தாலும்
பாரில் உங்கள் மடியில் தவழ வேண்டி நிற்கும்:

மனைவி, மக்கள்,
சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளை.

(சி-39739) (24-19-45)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

பிறப்பு 20 - 11 - 1934



இறப்பு 08 - 11 - 2004

**திருமதி இராசபூபதி இரத்தினராசா**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து அமரராகிவிட்டீர்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்ப ஒளிவிளக்காகத் திகழ்ந்த அன்புத் தெய்வத்தின் நினைவாக அஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (8.12.2004) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடேசன் வனிதாமணி அவர்களின் இல்லத்தில் S. கனகரட்ணம் (சகோதரன்), பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனுசரணையுடன் நடைபெறும்.

555/15, பருத்தித்துறை வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம். (39394)(42-19-45-24)

தகவல்:
நடேசன் வனிதாமணி
குடும்பத்தினர்.


### விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் நிகழ்வு

மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளையினால் வசாவிளான், குட்டியபுலம பகுதியில் வசிக்கும் 42 விவசாயிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குட்டியபுலம் விவசாய சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு விவசாய சம்மேளனத் தலைவர் தலைமையில் குட்டியபுலம் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கே.ஆனந்தராசா, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன மக்கள் விவகாரத் திட்ட இணைப்பாளர் நிக்கொலின், மல்லாகம் கிளைப் பொறுப்பாளர் கபார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (10-86)

உதயன்

# ஐ.தே.கட்சியின் வேடமும் அம்பலம்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் தென்னிலங்கை பெரும்பான்மை இனத்தவர்களின் கட்சிகள் என்னதான் வெவ்வேறு சமாதான வேடங்களைப் போட்டாலும் அவை அனைத்துமே இந்த விடயத்தில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தாம். அவற்றுக்குள் வேறுபாடு ஏதும் இல்லை என்பதை அவை மீண்டும் ஒரு தடவை கூட்டாக நிரூபித்திருக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் இந்த வரவு-செலவுத் திட்டத்தை இவ்வளவு காலமும் நார்நாராகப் பிய்த்து உதறியது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

வெளிவேஷத்துக்கு ஏதோ அமைதி விரும்பி, சமாதானத் தீர்வின் தாகம் கொண்ட கட்சி என்றெல்லாம் அது தன்னைக் காட்டிக் கொண்டாலும், அதுவும் தனது உண்மையான பௌத்த சிங்கள மேலாண்மை சுயரூபத்தை அவ்வப்போது வெளிப்படுத்தத் தவறுவதில்லை.

அந்த வகையில், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான வாக்கெடுப்பில் ஐ.தே.கட்சி நடந்து கொண்ட விதமும் ஒன்று.

"இந்த வரவு-செலவுத் திட்டம் சுத்த 'ஹம்பக்'. இதில் நாட்டுக்கு வருமானம் ஏதும் உரிய முறையில் முன்மொழியப்படவில்லை. நாட்டுக்கு 'ஆபத்தான பட்ஜெட்'. மக்களைக் கடனில் ஆழ்த்தப்போகும் ஒன்று. தமிழக மக்களை வீரப்பன் எவ்வளவு மோசமாக மிரட்டினானோ, அவ்வளவு மோசமாக இலங்கை மக்களை அச்சுறுத்தலில் ஆழ்த்தப் போவதால் இது 'வீரப்பன் பட்ஜெட்'. நிதி அமைச்சர் கனவு கண்டு கொண்டு இந்த வரவுக்கான ஆலோசனைகளைக் கூறியிருக்கின்றார். அவை எவையும் நடைமுறைச் சாத்தியமற்றவை." - இப்படி எல்லாம் மேடைக்கு மேடை முழங்கி வந்தது ஐ.தே.கட்சி.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஐ.தே.கட்சி சார்பில் ஒரு பிடிபிடித்த முன்னைய ஐ.தே.கட்சி அரசின் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் போய் ஒரு கருத்தை முன்வைத்தார்.

"அரசின் இந்த வரவு-செலவுத் திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது. அதனால் எழக்கூடிய விபரீதங்களை நாடு விரைவில் சந்திக்க வேண்டியிருக்கும். அப்போது நிலைமை மோசமாகும். அதைச் சமாளித்து அரசு சாக்குப் போக்குக் கூறவேண்டும் என்றால், யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதே இந்த அரசுக்கு ஒரே வழி" என அவர் பகிரங்க எதிர்வு கூறலையும் விடுத்திருந்தார்.

அதை நிரூபிப்பதுபோல, இந்த யுத்தநிறுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழமையை விட அதிக நிதியை ஒதுக்கி, தனது யுத்த முஸ்தீபுக் கருத்தை அரசு உறுதிப்படுத்தியிருந்தது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சமாதான முயற்சிகள் குறித்தோ அமைதி எத்தனங்கள் பற்றியோ அரசு எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை என்று குற்றம் சுமத்தி வந்த ஐ.தே.கட்சி -

வரவு-செலவுத் திட்டத்தின் பல அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை எதிர்த்து வாக்களித்தும், வேறு சில அமைச்சுக்களுக்கான ஒதுக்கீட்டின் மீதான வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்தும் வந்த ஐ.தே.கட்சி-

யுத்த முனைப்பை வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தும் பாதுகாப்பு அமைச்சுக்கான இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம், தானும் பேரினவாதத்தில் மூழ்கித் திளைத்த தென்னிலங்கைக் கட்சிகளிலிருந்து சற்றும் வேறுபட்டதல்ல என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றது.

பௌத்த, சிங்கள மேலாண்மை வாதத்தில் ஊறித் திளைத்த ஜே.வி.பி. போன்ற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அரசு அமைத்ததால், அந்த வழியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இழுபடுகின்றது என்று பார்த்தால், தானும் கூட அந்த வழியில்தான் என நிரூபிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது ஐ.தே.கட்சி.

தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகிய மூன்று விடயங்களும் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் விவகாரத்தில் மூலாதாரமான அடிப்படை அம்சங்கள். இந்த மூன்றும் தொடர்பாகவும் தென்னிலங்கைக் கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் ஒரு கோரிக்கை விடுத்திருந்தார். அது குறித்து ஆளும் கூட்டமைப்பின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, பெரும்பான்மையினத்தவரின் மற்றப் பெரிய கட்சியான ஐ.தே.கவோ இதுவரையும் எந்தப் பதிலையுமோ, பிரதிபலிப்பையுமோ காட்டவில்லை.

இந்நிலையில், வெளியில் சமாதான வேடமிடும் ஐ.தே.கட்சியின் அமைதி முயற்சி தொடர்பான நிலைப்பாடு இதுதான் என்பதைத் தெளிவாகக் கோடிட்டு - அம்பலப்படுத்தி - வெளிப்படுத்தியிருக்கிறது பாதுகாப்பு அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவகாரத்தில் அக்கட்சி நடந்துகொண்ட முறைமை.

தலைவர் பிரபாகரன் கூறியது போன்று ஈழத் தமிழர்களுக்கு, அவர்களது நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் - அவர்களின் வாழ்வாதார உரிமைகளை அங்கீகரிக்கும் விதத்தில் - தீர்வு ஒன்றை வழங்க மறுப்பதில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையே எந்தப் பேதமும் இல்லை. அவை அதில் ஒன்றுபட்டு நிற்கும் என்பது இப்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, அவ்வளவே.

# அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வசதியாகக் குடிசனத்தொகை மதிப்பீடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வசதியாகக் குடிசனத் தொகை மதிப்பீட்டை மேற்கொள்ளவும், ஆளனியினரை ஏற்பாடு செய்வதற்கும் உதவுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு 'மிலேனியம் அபிவிருத்தி இலக்கு' என்னும் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் ஏ.சக்திவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு குடிசன மதிப்பீடு அவசியம். அதன் அடிப்படையிலேயே அபிவிருத்திகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால், 1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மதிப்பீடு எடுக்கப்படவில்லை. எனவே, குடிசன மதிப்பீட்டுக் குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளோம்.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் மதிப்பீடு செய்வது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடிய போது, தாங்கள் அதற்கு ஆதரவு தருவதாகவும், ஆளணியினரை ஏற்பாடு செய்து மதிப்பீட்டை மேற்கொள்ளவும் சம்மதம் தெரிவித்தார்கள்.

எமது அபிவிருத்தி 8 இலக்குகளைக் கொண்டது. வறுமையையும் பட்டினியையும் ஒழித்தல், பெண்களை வலுவூட்டல், குழந்தை இறப்புக்களைக் குறைத்தல், கர்ப்பிணித் தாய்மார்களின் உடல் நலத்தைப் பேணல், இறப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களை ஒழித்தல், சூழலைப் பாதுகாத்தல், உலகளாவிய ரீதியில் அபிவிருத்திக்குப் பங்காற்றுதல் என்பனவே அந்த இலக்குகள்.

இந்த இலக்குகளுக்கு 48 வழிகாட்டிகளுடன் 2015 ஆம் ஆண்டில் தீர்வு காணவேண்டும்.

இதற்கு எமது 'மிலேனியம் அபிவிருத்தி இலக்கு' என்னும் குழு ஆராய்வுகளைச் மேற்கொண்டு அரசிடம் அறிக்கைகளை சமர்ப்பிக்கும். இந்த இலக்கு அடையப்படாவிடில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசே தீர்மானிக்க வேண்டும்.

எமது அறிக்கையின் பிரகாரமே எவ்வாறான உதவி எமது நாட்டுக்குத் தேவைப்படும் என்று கணக்கிட்டு, உதவி வழங்கும் நாடுகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்றார். (ஐ-202-203)

# மிலேனியம் அபிவிருத்தி இலக்கு: நடைமுறை பற்றி பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்.டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் மிலேனியம் அபிவிருத்தி இலக்கை சமூகமயப்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எஸ்.ரகுபத்தின் ஆரம்ப உரையினைத் தொடர்ந்து 'மிலேனியம் அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமும் அபிவிருத்தியும்' எனும் தலைப்பில் மிலேனியம் அபிவிருத்தி இலக்கின் திட்டப்பணிப்பாளர் ஏ.சக்திவேல் கருத்துரை வழங்கினார்.

'மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோளும் இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியும்' எனும் தலைப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதிநிதி ஜெரமிகார்டசன் கருத்துரை வழங்கினார். தொடர்ந்து 'மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோளை நிறைவேற்றும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்' எனும் தலைப்பில் இத்திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் வி.சிவஞானசோதி -

'யுத்தத்தின் தாக்கங்களின் பின்னணியில் மிலேனியம் அபிவிருத்தி நோக்கங்களைச் சமூகமயப்படுத்தல்' எனும் தலைப்பில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி-

'யாழ்.மாவட்டத்தில் இன்றைய சுகாதார சூழ்நிலை மற்றும் யாழ்.மாவட்ட சூழல்' எனும் தலைப்புகளில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் ஆர்.தெய்வேந்திரன் ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து வடக்கு - கிழக்கின் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் டாக்டர் அனிற்றா நேசையா, வடக்கு - கிழக்கில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பானச் அறிமுகச் செயற்பாட்டை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கண்காணிப்பு ஆலோசகரான டாக்டர் காமினி டி சில்வாவினால் குழுச்செயற்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடலும் இடம்பெற்றது.

(ஐ-202-203)

### அடையாள பகிஷ்கரிப்பின் ஓர் அங்கமாக

# சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று மாநகரசபை முன்பாக ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று இரண்டு மணிநேரம் மாநகரசபை அலுவலகத்தின் பிரதான நுழைவாயில் கதவைப் பூட்டி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் மாநகரசபையின் அலுவலகத்திற்கு வருகை தந்த சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நுழைவாயில் கதவைப் பூட்டிவிட்டு அவ்விடத்தில் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளே செல்ல முடியாதநிலை ஏற்பட்டது.

இதன் காரணமாகச் சம்பவ இடத்திற்கு வருகை தந்த நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், வட பிராந்திய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

இதனையடுத்து, தொழிலாளர்கள் மாநகரசபை அலுவலகத்தின் நுழைவாயில் கதவைத் திறந்துவிட்டனர். அதன் பின்னரே உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் உள்ளே செல்ல முடிந்தது.

குருநகர் மற்றும் திருநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையே சில தினங்களுக்கு முன்னர் மோதல்கள் இடம்பெற்றுவந்தன. இதன் எதிரொலியாக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் ஆங்காங்கே வைத்துத் தாக்கப்பட்டு வந்தனர்.

இதனையடுத்து மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அச்சத்தின் காரணமாகச் கடந்த 9 நாள்களாகத் தொடர்ந்து தமது பணிகளை பகிஷ்கரித்து வருகின்றனர். (10-13-51-86)

# யூனியன் கல்லூரிக்கு மக்கள் வங்கி 50 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது

வலி.வடக்கு.டிசெ.8

மக்கள் வங்கியினால் நடத்தப்பட்ட இளம் சாதனையாளர் தெரிவைத் தொடர்ந்து பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலையான தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 50 ஆயிரம் ரூபா மக்கள் வங்கியினால் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இளம் சாதனையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதுடன், இவர்கள் மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருந்தால் இரட்டிப்பாக இவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இளம் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் பின்தங்கிய நிலையில் இருப்பதுடன், பாடசாலை வளாகத்தில் 'சிசு உதான' கருமபீடம் இருந்தால் இப்பாடசாலைகளுக்கு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இடம்பெயர்வுக்கு உள்ளாகி நூலகம், ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் என மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் கூட முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட முடியாத நிலையில் இருப்பதனால் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு இடையே சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 'சிசு உதான' கருமபீடத்தை மாணவர்களின் உதவியுடன் இயக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(10-86)

# தளபாடங்கள் வழங்கப்பட்டபோதும் சமுர்த்தி மகாசங்கம் செயற்படவில்லை

சங்கானைப் பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தை அமைத்து, சமுர்த்தி வங்கிகளின் நிதியினை முதலீடு செய்வதற்கு சமுர்த்தி அதிகார சபையினால் தளபாடங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதும் மகாசங்கம் இன்னமும் இயங்கவில்லை.

சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மையப் பகுதியாக சங்கானை பிரதேச செயலகம் அமைந்துள்ளமையால் அப்பகுதியில் மகாசங்கத்தை அமைத்து, சமுர்த்தி வங்கிகளின் நிதியினை முதலீடு செய்து, நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாகத் தளபாடங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

சமுர்த்தி அதிகாரசபையால் தளபாடங்கள் வழங்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மகா சங்கம் அமைக்கப்படவில்லை. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உருவாக்கப்பட்ட மகாசங்கமே ஒரு சில அலுவலர்களோடு தற்பொழுது இயங்கி வருகின்றது.

சங்கானை பிரதேச மகா சங்கம் அமைக்கப்படாமையால் காரைநகர் மற்றும் சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி சிறுகுழுக்களின் மகா சங்கப் பிரதிநிதிகள் தொடர்பாடல் மற்றும் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-161)

**நாளை**

*கார்த்திகை 24*
*வியாழக்கிழமை*
*(09.12.2004)*
*திதி: துவாதசி*
*பிற்பகல் 01.09*
*நட்சத்திரம் : சுவாதி*
*மாலை 05.32*
*பிரதோஷ விரதம்*
*சுபநேரம்: 07.49 - 09.19*
*ராகுகாலம்: 01.49 - 03.19*
*(பழையநேரப்படி)*

# பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கு நேற்று யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வைத்து நூல்கள் வழங்கப்பட்டன.

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட 47 பாடசாலைகள் இந்த நூல்களைப்பெற்றுக் கொண்டன.

ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 100 புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது.

இதேவேளை - இன்றுகாலை 9 மணியளவில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை நூலகங்களிற்கான நூல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் -சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் - மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் கேட்டுள்ளனர். (10-13)

**உதயவாக்கு**

பிறரின் கணக்குத் தப்பானாலும் தாயின் கணக்குத் தப்பாது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, நாக்கியம்புலம் சுன்னாகம் பகுதியில் 10 பரப்பு சோலையான வளவில் சகல வசதிகளுடன் கூடியவீடும், 4½ பரப்புள்ள இருகடைக் கட்டடத்தொகுதிகளும் மற்றும நல்ல நிலையிலுள்ள கேம்பிறிச் வானும் விற்பனைக்குண்டு. தொடர்பு: J.மொண்பேட், நாக்கியம்புலம், சுன்னாகம். (39313)

நல்ல நிலையில் உள்ள 57-XXXX இலக்கமுடைய TOWN ACE வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: கருவேலனடி லேன், மணியகாரன் வீதி, மணியகாரன் வளவு, கொக்குவில் கிழக்கு. (39349)

புதிய மணவறை, நல்ல நிலையிலுள்ள பாவித்த மணவறை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.தயா, இணுவில் சந்தி, இணுவில். (39392)

## நூல்கள் விற்பனைக்கு

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1.யாழ்ப்பாணமா? கொழும்பா? 2.யாழ்ப்பாணம். 3. இலக்கியக் கட்டுரைகள். 4.ஒரு காதலின் கதை. 5.எங்கள் நாடு. 6.வானொலி நாடகம் எழுதுவது எப்படி? 7."வீடற்றவன்" நாவலின் விளக்கம். (39378)

## கடை வாடகைக்கு

யாழ்.நகரை அண்டிய பகுதியில் கஸ்தூரியார் வீதியில் அமைந்த நகைக்கடை ஒன்று வாடகைக்கு உண்டு. (Mobile Phone/ உதிரிப்பாக/ Internet cafe/வேறு பாவனைக்கும் உகந்தது) தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். E-mail - thuwarakan @Lycos.com. (39339)

## தவறிவிட்டது

கரவெட்டி, துன்னாலை தெற்கு, கோட்டப்பளையைச் சேர்ந்த தேவகுமார் பாக்கியலட்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.646713285V), விசேட அடையாள அட்டை (இல.0909011466) என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் 145, நவீனசந்தை, யாழ்ப்பாணத்திலோ அல்லது மேலுள்ள முகவரியிலோ ஒப்படைத்துதவவும். தொலைபேசி இல. 077 6647488. (39345)

ஒரு தொகைப் பணத்துடன் கறுப்புநிற பையொன்று திருநெல்வேலிச் சந்திக்கும் மானிப்பாய்ச் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்உள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும். ம.கோபாலவண்ணன், வட்டு. தொலைத்தொடர்பகம், வட்டுக்கோட்டை. T.P.: 222 5907, 077 6220108 (சன்மானம் வழஙகப்படும்.) (39376)

## கோழிக்குஞ்சு விற்பனை

Original Prima பேட்டுக்குஞ்சுகள் (3கிழமை தொடக்கம் 4மாதம் வரையுள்ளது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39385)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 20.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பரு. நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39386)

## மணமகள் தேவை

45 வயது, லண்டன் பிரஜாவுரிமையுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. சமயம், கல்வித் தடையில்லை. (உடனே லண்டன் அழைத்துச் செல்கிறார்) தொடர்பு: 077 - 6176476. (39553)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970ஆம் ஆண்டு, அவிட்டம் 2ஆம் பாதம், பாவக்கிரகம் 18¼ 6இல் செவ்வாயுள்ள, B.Sc. பட்டதாரி ஆசிரியருக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. (ஆசிரியை விரும்பத்தக்கது.) குடும்ப விவரம், ஜாதகக்குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2448, மே/பா, உதயன். (39322)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொத்தர் (Green Card) விண்ணப்பிக்க முடிவு திகதி நெருங்கிவிட்டது. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்த நாள்கள், விலாசத்தையும் எழுதி ரூபா 300/- மணியோடருடன் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2 - F23, BLOEMENDHAL FLATS, KOTAHENA. T.P.: 077 3081764. (C/39500)

## விபத்தில் காயம்

எதிரெதிரே வந்த மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் இருந்து வந்தவர் தலையிலும் காலிலும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி மேற்கில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைதடி தெற்கைச் சேர்ந்த புஸ்பராசா ஜெகதீஸ்வரன் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவராவார். (10-75)

## வடமராட்சியில் தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.8

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 11 ஆம் ஆண்டு ஆண்கள் அணிகளுக்கிடையிலான தாச்சிப் போட்டி இன்று காலை 8.30 மணி முதல் வதிரி திருஇருதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

தெரிவுசெய்யப்பட்ட அணியினரை ஆட்டம் ஆரம்பமாகும் நேரத்துக்கு முன் சமுகம் அளிக்கும்படி உதவிக் கல்வி (உடற்கல்வி) பணிப்பாளர் வே.வல்லிபுரம் கேட்டுள்ளார். (3)

## நூல் வெளியீடு

கரவெட்டி,டிசெ.8

'சைவன்' என்னும் சமய நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் செ. சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை நூலினை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை சி. அகிலாஸ் பெற்றுக் கொள்வார். (10-204-70)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 29 - 02 - 1928

விண்ணில் 05 - 12 - 2004

### திருமதி கனகமணி இரத்தினசாமி

(உப அதிபர், யா/வடஇந்து மகளிர் கல்லூரி)

எமது கல்லூரியில் ஆசிரியராய், உபஅதிபராய் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி மாணவர் மனங்களில் மாறா இடத்தைப் பதித்த திருமதி கனகமணி இரத்தினசாமி அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/வடஇந்து மகளிர் கல்லூரி.

(சி-39732)(26-19-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 - 07 - 1927

விண்ணில் 08 - 12 - 2003

### தீயோ சின்னப்பு செபமாலையம்மா

*சீவியத்திலும் உங்களை நேசித்தோம்*
*மரணத்திலும் உங்களை மறவோம்*

எங்கள் நலனுக்காக உங்களை
அர்ப்பணித்த தெய்வங்களே – என்றும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்
நீங்காது நிலைத்து நிற்கும்!

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலை மாரீசன் கூடல் புனிதகயித்தானு முனீந்திரன் ஆலயத்தில் 11.12.2004 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றி ஆறுதலுக்காக ஜெபிக்கும் வண்ணம் பணிவுடன் வேண்டுகிறோம்.

*6/5. மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர் – சகோதரிகள்
குடும்பத்தினர்.

(39381)(42-19-15-26)

## மரண அறிவித்தல்கள்

### அப்பச்சி குணரட்ணம்

(ஓய்வு பெற்ற ஊழியர், கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பச்சி குணரட்ணம் நேற்று (07.12. 2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பச்சி - மீனாட்சி தம்பதியின் புத்திரனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் திருமதி குணசேகரத்தினம், நாகராசா, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி, ஜெயலக்சுமி, மகேஸ்வரி, ஈஸ்வரி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும் விக்னேஸ்வரன், முரளீஸ்வரன் (பிரான்ஸ்), சுரேஸ்வரன் (கொமர்ஷல் வங்கி, நெல்லியடி), கமலேஸ்வரன் (இத்தாலி), றங்கேஸ்வரன் ஆகியோரின் தகப்பனாரும் சிறிகௌரி, கலாதேவி (பி.மா.சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.12.2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கப்புலம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (39388)(42-19-15-26)

தகவல்: கு.சுரேஸ்வரன் (மகன்).

### துரைசிங்கம் சிவாஸ்கரன் (சிவாஜி)



நீர்வேலியைச் சேர்ந்தவரும் சுவிஸில் வசித்தவருமான துரைசிங்கம் சிவாஸ்கரன் அவர்கள் 05.12.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு சுவிஸில் காலமானார்.

அன்னார் துரைசிங்கம் - ஞானசவுந்தரி (காலஞ்சென்றவர்) தம்பதியின் மகனும் செல்லக்குமாரி, பாலசுப்பிரமணியம், உஷா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சர்மிலாவின் (சுவிஸ்) அன்புக் கணவரும் கஜிதரன், யஸ்மிதா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை சபாரத்தினம் மற்றும் பராசக்தி ஆகியோரின் மருமகனும் பிறேம் ஆனந் பவதாரணி, அச்சுதன் ஆகியோரின் மைத்துனரும் கம்சன், அனுசன் ஆகியோரின் மாமனாரும் டிலக்சனா, டினுசா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2004) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் (சுவிஸ் நேரப்படி) சுவிஸில் நடைபெறும்.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அச்செழு, நீர்வேலி.* (39383)(43-19-15-26) ச.அச்சுதன் *(மைத்துனர்).*

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன்
சி.சந்துரு
அவர்களின் அன்புத் தந்தை

### கனகசபைப் சிவபாலன்

அவர்கள் 06-12-2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அவரின் மறைவையொட்டி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


A/L 2006 (வர்த்தகப்பிரிவு)
மாணவர்கள்,
ஆசிரியர்கள்.

யாழ்.இந்துக்கல்லூரி.

(39390)(26-19-15)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 25 - 12 - 1900



ஆண்டவன் அடியில் 19 - 11 - 1995

### அமரர் இளையதம்பி கனகசபாபதி

*(இளைப்பாறிய மலேயன் பென்சனியர்)*

திதி: அபரபக்க துவாதசி 08-12-2004

*கடமையே கண்களாய்க் கொண்டு*
*எமையெல்லாம் உயர் நிலையில்*
*வாழவைத்த ஆருயிர்த் தந்தையே!*
*எமைவிட்டு நீங்கள் பிரிந்து*
*ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்*
*எம் நெஞ்சக் கமலத்தில் உமையிருத்தி*
*கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலித்து*
*ஆத்ம சாந்திக்காய் ஊரெழு வீரகத்திப்*
*பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.*

க.ஸ்ரீபதி (மகன்),
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(39384) (26-19-15)

## இலவசக் கண் பரிசோதனை

வட்டுக்கோட்டை,டிசெ.8

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயம், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் என்பன இணைந்து எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை வட்டு.கார்த்திகேய வித்தியாசாலையில் இலவச கண் பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளன.

வறுமைக்கோட்டிற்குட்பட்டோர் மற்றும் பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. கண்பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள், வறுமைக்கோட்டிற்குட்பட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறமுடியும் என்று கண்ணகி அம்மன் ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் கலக் விசுவநாதன் தெரிவித்துள்ளார். (10-161)


## KARAN'S ACADEMY ACHCHELU

புதிய வகுப்புகள் அனைத்தும்
10-12-2004 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4.00 மணிக்கு
ஆரம்பாகின்றன.

| | |
|---|---|
| கணிதம் - | திரு.ம.சசிக்குமார் |
| விஞ்ஞானம் | திரு.ம.பிரபாகரன் / செல்வி த.ஜெயரூபா |
| தமிழ் - | செல்வி ப.கலாரூபி |
| ஆங்கிலம் - | திரு ம.பிரபாகரன் |
| வர்த்தகம் - | திரு.ம.செபதீபன் |
| சமயம் / புவியியல் | செல்வி செ.சுகந்தினி |
| சமூகக்கல்வியும் வரலாறும் | திரு.ம.பிரதீப் |

பத்தாவது ஆண்டில் காலடிவைக்கும் எமது நிலையம் 2005 கல்வி ஆண்டிலிருந்து அனைத்து வகுப்புகளையும் மாணவர் நலன்கருதி பகல் நேர வகுப்புகளாக நடத்தவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

கரன்ஸ் அக்கடமி,
அச்செழு. (26-19-15) - நிர்வாகி.

(39380)

# “தனித்துவத்தைப் பேணி வளரும் தமிழீழ நீதி நிர்வாகச் சேவை...”



கடந்த இரண்டு தசாப்தங்களாக வடக்கு - கிழக்கில் வாழ்ந்த மக்கள் வன்முறையாலும் தொடர்ச்சியான போரினாலும் இடப்பெயர்வுகளாலும் பாதிப்புக்குள்ளாகினார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்பின் தன்மையைப் பொறுத்து இழப்பீடுகளையோ அல்லது உதவிகளையோ பெற்றதாக சரித்திரம் இல்லை.

யுத்தத்தை ஒரு பொருட்டாகவும் ஆதிக்க வெறியர்களின் பாரபட்சமான, கொடுமையான சட்டங்களாலும் அப்பாவிப் பொதுமக்கள் பலர் கண்மூடித்தனமாக சுட்டுக்கொல்லப்பட்டதுடன் கொலைகளைப் புரிந்தவர்கள் எவ்வித சிரமமும் இன்றி சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பி வாழ்கிறார்கள்.

இன்றைய அரசியல்வாதிகள் தாங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்பதை மறந்து மக்களுக்குச் சேவை செய்வதை விடுத்து ஆளும் அதிகாரத்தில் எவ்வளவு காலம் நீடித்து நிலைக்கலாம் என்பதுடன் அதற்கான சட்டத் திருத்தங்களை செய்வதில் ஆர்வமாக உள்ளார்கள். ஆனால், மக்களுக்குப் பாதுகாப்பற்ற சட்டங்களை நீக்குவதற்கோ காலத்தின் தேவைக்காக சட்டங்களை திருத்தியமைப்பதற்கோ விரும்புவதில்லை.

இன்றைய சிறிலங்காவில் சகல துறைகளிலும் உள்நுழைந்த இலஞ்சம், ஊழல் என்பன நீதித்துறையையும் விட்டுவைக்கவில்லை. கண்ணெதிரே கொலையைச் செய்தவன்கூட காசு கைமாறியதும் குற்றமற்றவனாக மிக விரைவில் விடுதலையாகின்றான்.

கொலை செய்யப்பட்டவன் ஏழையானால் பாவம் அவன் குற்றவாளியாக சோடிக்கப்பட்டு அரச செலவில் அடக்கம் செய்யப்படுகின்றான்.

இதுமட்டுமா? குற்றவாளிகள் மிகவிரைவாக சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதால், சுதந்திரமாக உலாவுவதுடன் தொடர்ந்தும் குற்றங்களைப் புரிகிறார்கள். விளைவுதான் என்ன? கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், போதைப்பொருள் என்பவற்றால் எமது சமூகம் சீரழிந்து வருகிறது.

இதுமட்டுமா? சட்டத்தை முறையாகப் பேணும் பொலீஸ்துறை கூட இலஞ்சம், ஊழல் என்பனவற்றால் கட்டுண்டு நீதியை நிலைநாட்ட முடியாமல் தள்ளாடி வருகின்றது.

நீதித்துறையின் தேவர்கள்கூட அரசியல்வாதிகளின் மிரட்டலுக்கும் பதவி உயர்வுகளுக்கும் பயந்து நீதியை நிலைநாட்டத் தவறி அநீதிக்கு ஒத்துழைக்கின்றார்கள்.

இதன் விளைவுதான் என்ன?

குற்றவாளி நிரபராதியாகின்றான்; நிரபராதி குற்றவாளியாகிக் கூண்டில் அடைக்கப்படுகின்றான்.

இது ஒருபுறம்... மறுபுறமாக அரசியல் இலாபங்களுக்காகவும் இன ஒடுக்குமுறைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்ட சட்டங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

பயங்கரவாதிகளை அழிக்கத்தான் என்று சொல்லி இன ஒடுக்குமுறைக்காக மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வந்ததுதான் அவசரகாலச் சட்டம்.

அந்தச் சட்டத்தினால் கைதுசெய்யப்பட்டு இன்னும் சிறைச்சாலைகளில் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டவர்கள் ஏராளம்.

இவ்வாறு மக்களை பாதுகாக்க வேண்டிய சட்டங்கள் மக்களை துன்புறுத்தும்போது இலங்கைத்தீவில் யாவரும் நம்பிக்கை இழந்தனர்.

இது சிறிலங்காவில்...

சிவில் நிர்வாகம் சீராக... நீதிச்சேவை சிறப்பாக நடக்கின்ற இப்பிரதேசத்தில் இவ்வாறான அநீதிகள் எனின்....

போர், இடம்பெயர்வு, பட்டினிச்சாவு, சொத்திழப்பு, பொருளாதாரத் தடை, அரச படைகளின் தாக்குதல் என்பனவற்றால் பாதிப்புக்குள்ளானவர்கள் வாழும் வடக்கு -கிழக்கில் எப்படியப்பா நீதியைக் காணலாம். இது வாஸ்தவம் தான். ஆனால், நடந்ததோ நேர் எதிர்.

1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இனக் கலவரங்களை அடுத்து 1984 ஆம் ஆண்டிற்கு பின்பு நாட்டின் அரச நிர்வாகங்கள் இல்லாமல் போயின. விடுதலைப் புலிகளும் போராட்டத்தில் முழுக் கவனமும் செலுத்தியதால் ஒரு சீர்கெட்ட இடைவெளி ஒன்று உருவாகியது.

அத்துடன், சிறிலங்கா அரசின் நீதித்துறை பாகுபாடான முறையிலும் தமிழ்த் தேசியப் போராட்டத்தை அடக்க முற்பட்டதிலுமே கூடிய கவனத்தை செலுத்தியதுடன் மக்கள் சுதந்திரமாக வாழமுடியாத நிலை உருவாகியது.

இச்செயற்பாடுகள்தான் எமது தேசியத் தலைவரின் உள்ளத்தில் ஒரு புதிய பரிணாமத்துக்கான புள்ளியைத் தோற்றுவித்தது.

அதாவது, உலகப் பெரும் புகழ்பெற்ற ஒரு மாவீரன் நெப்போலியன் தனியே நின்று நீதித்துறையை உருவாக்கி, மக்களைப் பாதுகாக்க முடியுமாயின் எம்மால் ஏன் முடியாது என்ற கேள்விக்கு விடையே இன்றைய நீதித்துறையின் வளர்ச்சி. நீதித்துறையின் பல எதிர்ப்பார்ப்புகள் உள்வாங்கப்பட்டிருந்தன. அதாவது, பாரபட்சமற்ற முறையில் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். பாமரமக்களின் உரிமைகள் விசேடமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதுடன் பாதிக்கப்படவும் கூடாது. போராளிகளால் மக்கள் பாதிப்புக்குட்படாமை, தண்டனை என்பது மற்றவர்கள் பிழைவிடக்கூடாது என்பதற்கான முன்எச்சரிக்கையாக அமையவேண்டுமே ஒழிய உடல், உள ரீதியாகப் பாதிப்புக்குட்படுத்தக் கூடாது.

நீதியின்பால் கிடைக்கும் தீர்ப்பானது மக்களுக்கு விரைவில் கிடைக்கக் கூடியதும் இருதரப்பாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

1993 ஆம் ஆண்டிற்கு முன் சீரற்ற கட்டமைப்பைக் கொண்டிருந்த தமிழீழ நீதிநிர்வாகச் சேவை படிப்படியாக வளர்ந்து உலகளாவிய ரீதியில் சகலரும் எமது தமிழீழ நீதிநிர்வாகச் சேவையை முன்னுதாரணம் கொள்கின்ற செயலானது எம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த இலங்கை சட்டவியற்கல்லூரித் தலைவரும் சட்ட விரிவுரையாளருமான செல்வகுமார் கருத்துத் தெரிவிக்கையில் -

இலஞ்சம், ஊழல் அற்ற, பாரபட்சமற்ற நிலையில் நீதியை வழங்குவதுடன் மக்களின் அதிகூடிய நம்பிக்கையைப் பெற்ற ஓர் அமைப்புத்தான் தமிழீழ நீதி நிர்வாக சேவை என்பதுடன் தமிழீழ நீதிமன்றங்களினதும் காவல்துறைகளினதும் செயற்பாட்டை மிகவும் பாராட்டினார்.

மேலும், நீதியரசர் விக்கினேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை நீதி நிர்வாகச் சேவை ஊழல் நிறைந்ததாகவும் மிகவும் பழைமை வாய்ந்த சட்டங்களை கொண்டிருப்பதுடன் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையானதாக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறு உலகம் போற்றும் வகையில் தூய சிந்தையுடன் செயற்படும் தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் பொறுப்பாளர் இளையதம்பி பரராசசிங்கம் (பரா) அண்மையில் உதயனுக்கு விசேட செவ்வி அளித்தார்.

● நீதி நிர்வாகத்துறையின் வளர்ச்சி எல்லோராலும் புகழப்பட்டாலும் அது கடந்து வந்த காலத்தில் இடர்பாடுகள் என்ன என்பதை குறிப்பிடமுடியுமா?

■ தொடர்ச்சியான யுத்தம், குண்டுத் தாக்குதல், பொருளாதார நெருக்கடியால் நாம் பல இன்னல்களைச் சந்தித்திருந்தோம். குண்டுத் தாக்குதல்களால் எமது நீதிமன்றங்கள் அழிக்கப்பட்டன. எமது நீதியாளர்கள், சட்டவாளர்களுமாக 12 பேர் வீரச்சாவடைந்தனர். அத்துடன், நாம் பல இடம்பெயர்வுகளை தொடர்ச்சியாக சந்தித்ததால் பல சந்தர்ப்பங்களில் எமது துறையின் சேவை மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்தது.

● குறிப்பாக நீதிநிர்வாகத்துறையின் வளர்ச்சியால் அடைந்த சாதனைகளை குறிப்பிட முடியுமா?

■ பல சாதனைகளைக் குறிப்பிடலாம். எமது 12 வருட வளர்ச்சிப் பாதையில் 36,000 வழக்குகள் பொறுப்பேற்றதுடன் 3,000 இற்கு மேற்பட்ட வழக்குகளுக்கான தீர்ப்பையும் வழங்கியுள்ளோம். இலங்கை - இந்திய நீதித்துறையினருடன் ஒப்பிடும்போது நாம் மிக முன்னணியில் நிற்கின்றோம்.

நாம் வழங்குகின்ற தீர்ப்பிற்கான மேன்முறையீடுகளும் மிகக்குறைவாகக் காணப்படுகின்றன. இது மக்களின் நம்பகத்தன்மையையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் வெளிக்கொணர்கிறது.

1993தொடக்கம் 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எமது நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் செயற்படுகையில் பாரிய குற்றச்செயல்களாக மாதமொன்றுக்கு 15 ஐ விடக் குறைவாகவே காணப்பட்டன. ஆனால், இன்று நிலைமை மாறி 30 இற்கு மேலாக அதிகரித்துக் காணப்படுவதுடன் தற்போது எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. அத்துடன் எமது சட்டக் கல்லூரி மூலம் உருவாக்கப்பட்ட பல சட்டவாளர்கள் மிகச் சிறப்பாக செயற்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் 40 சட்டவாளர்கள் இருக்கும்போது இங்கு 120 இற்கு அதிகமானோர் ஈடுபடுகின்றனர்.

● தற்போது நீதிச்சேவையை நிலைநிறுத்த தாங்கள் கொண்டுள்ள அமைப்புக்களின் வடிவங்கள் எத்தகையது?

■ தமிழீழப் பிரதேசத்தில் ஏழு மாவட்ட நீதிமன்றங்களையும் 2 மேல் நீதிமன்றங்களையும் ஒரு மேன்முறையீட்டு நீதிமன்றத்தையும் ஒரு சிறப்பு நீதிமன்றத்தையும் அமைத்துள்ளோம். சிறப்பு நீதிமன்றமானது இலங்கையின் சுப்பிரீம் நீதிமன்றத்துக்கு சமமானது. சட்டவாளர்களை உருவாக்குவதற்காக சட்டக் கல்லூரிகளை அமைத்துள்ளோம். கிளிநொச்சியில் புதிய சட்டக் கல்லூரியை அமைத்துள்ளோம்.

மேலும், யாழ். மாவட்ட மக்களின் வழக்குகளை விசாரிக்கப் பளையில் மாவட்ட நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

● சிறீலங்கா சட்டக்கோவையை விட தமிழீழ சட்டக்கோவை எத்தகைய சிறப்பான விடயங்களைக் கொண்டுள்ளது.

**செவ்வி: மருதநம்பி**

■ பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு சற்று அதிக தண்டனைகளை வழங்குகின்றோம். கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களை நாம் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளோம்.

பாலியல் வன்முறைகளுக்கு அதிக பட்சமாக மரணதண்டனையை வழங்கியுள்ளோம்.

சொத்துப் பகிர்வின்போது ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அந்தஸ்து வழங்கியுள்ளோம்.

சிறப்பாக சிறிலங்கா சட்டத்தரணி ஒருவர் எமது நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்வதன் மூலம் அவர் சட்டவாளராகச் செயற்படலாம்.

இங்குள்ள சட்டவாளருக்குரிய தவணைக் கட்டணமாக 150 ரூபாவிலிருந்து 500 ரூபா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்திலேயே இதைச் செலுத்தவேண்டும். பின்பு அது சட்டவாளருக்கு நீதிமன்றால் வழங்கப்படும்.

● அண்மையில் பல நாடுகளின் சட்டத்துறையை ஆராய்ந்த நீங்கள் எவ்வாறான மாற்றங்களை உட்புகுத்த எண்ணியுள்ளீர்கள்.

■ நாம் பல நாட்டு சட்ட ஒழுங்குமுறைகளை ஆராய்ந்து வந்துள்ளோம். சில முக்கிய விடயங்களில் மாற்றங்களை அல்லது திருத்தங்களை உள்ளடக்க எண்ணியுள்ளோம். இருப்பினும் எமது தேசியத் தலைவருடனான கலந்துரையாடலின் பின்பே நாம் இறுதி முடிவெடுப்போம்.

● பெண்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளில் சில நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பாவிக்க வேண்டிய சந்தர்ப்பம் தோன்றின் அதை எவ்வாறு மேற்கொள்கின்றீர்கள்?

■ இவ்வாறான சந்தர்ப்பங்கள் பிள்ளைகளின் தகப்பனை உறுதிப்படுத்துவதற்காக நாம் மேற்கொள்வோம். இப்பரிசோதனை மரபணுப் பரிசோதனை என அழைக்கப்படுகிறது. அண்மையில் 4 வழக்குகள் இப்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இருப்பினும், 3 வழக்குகளில் சந்தேக நபர் குழந்தையின் தந்தை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளார். இப்பரிசோதனையை வெளிநாட்டு அமைப்புக்கள் மூலம் மேற்கொண்டு வருகிறோம்.

● இடைக்காலத் தன்னாட்சி சபை ஒன்று உருவானால் தங்கள் நீதி நிர்வாக சேவையின் செயற்பாடு எவ்வாறு இருக்கும்?

■ எமது தனித்துவத்தை வெளிக்கொணர்வதற்காகவே தேசியத் தலைவர் இதை உருவாக்கினார். எனவே நாம் தனித்துவமாக செயற்படுவோம். ★

# கொத்மலைத் திட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்!

## இரு வாரகாலத்துக்குள் நடவடிக்கை என்கிறார் அமைச்சர் பிரேமஜயந்த

கொழும்பு,டிசெ.8

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்திருக்கும் சூழ்நிலையில் இ.தொ.காவினால் இதுவரைகாலமும் கடுமையாக எதிர்க்கப்பட்ட மேல் கொத்மலை நீர்மின்சாரத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தப் போவதாக அரசு அறிவித்திருக்கின்றது.

மேல் கொத்மலை நீர்மின்திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்திருக்கும் அரசு இன்னும் இருவாரகாலத்திற்குள் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்து விடுமென மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கிறார்.

மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தால் சுற்றாடல் பாதிப்பு ஏதும் இல்லை என்பதை இது தொடர்பாக ஆராய்ந்த அமைச்சரவை உபகுழு கண்டறிந்துள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் திட்டம் முன்னெடுக்கப்படும் என்கிறார் அமைச்சர் சுசில்.

ஆனாலும், இதுதொடர்பில் நேற்று 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த இ.தொ.காவின் முக்கியஸ்தரும் அமைச்சருமான முத்து சிவலிங்கம் இந்தத் திட்டம் சம்பந்தமான இ.தொ.காவின் யோசனைகளை அரசு கவனிக்காவிட்டால் அதனைத் தமது கட்சி ஆட்சேபிக்குமென்று கூறினார்.

மேல் கொத்மலை நீர்மின்திட்டத்திற்கு சென்கிளையர் நீர்வீழ்ச்சியை மட்டும் இணைத்துக் கொள்ள முன்னதாக இணக்கப்பாடு காணப்பட்டது. இதில் நாம் ஒருவித இணக்கப்பாட்டுக்கு வந்தோம். ஆனால், அந்தப் பகுதியிலுள்ள அனைத்து நீர்வீழ்ச்சிகளையும் இத்திட்டத்தில் உள்ளடக்க முயற்சி எடுக்கப்படுவதாக இப்போது தெரிகிறது. இதனை நாம் ஆட்சேபிக்கின்றோம். இ.தொ.கா. இது பற்றி நிலைப்பாட்டை இன்னும் ஒருவார காலத்தில் அறிவிக்கும் என்றார் அமைச்சர் முத்து சிவலிங்கம்.

மேல் கொத்மலை நீர்மின்திட்டம் மற்றும் நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைப்பது சம்பந்தமான திட்டங்களை முன்னெடுப்பதில் அரசு காட்டிவரும் தாமதத்தை ஆட்சேபித்து வெகுவிரைவில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது.

உத்தேச மின்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு தாமதிப்பதனால் பெருமளவான நிதியை மின்சாரத் தேவைக்கு செலவிட வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டும் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இதுதொடர்பான விரிவான கடிதமொன்றை நேற்றுமுன்தினம் மின்சக்தி எரிசக்தி எரிபொருள்துறை அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறது.

தற்போது நிலவும் மின்சாரத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக அரசு தனியார் துறையினரிடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும்போது அவர்களின் பல நிபந்தனைகளை ஏற்றுப் பெருமளவு நிதியையும் செலவிட வேண்டியுள்ளது.

எனவே, உத்தேச நீர்மின் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். இந்த முயற்சிகளை மேலும் தாமதமாக்கினால், நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டிவரும் - என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.




'யுனிசெவ்' அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் நடத்திய கண்ணிவெடி இடர் அபாயக் கல்வி தொடர்பான பரிசளிப்பு விழாவில் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு 'யுனிசெவ்' திட்ட அலுவலர் யூட் பறுனே சான்றிதழ் வழங்குவதையும் கண்ணிவெடி அகற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் ஹரி வல்ஜகான் அமர்ந்திருப்பதையும் காணலாம். (படம்: நல்லூர்ச் செய்தியாளர்)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

மேற்படி வைத்தியசாலை தனது சேவையை மக்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளது.

பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு

ஆய்வுகூட வசதிகள்

※ இரத்தம் ※ சலம்

※ ஸ்கானிங் (SCAN) ※ ECG

நிபுணத்துவ ஆலோசனைகள்

மேலதிக விவரங்களுக்குக் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

☎ 060 221 2533.

- பணிப்பாளர் சபை.

(சி-39067)(34-19-44-26)



## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும் பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க கணக்குப் பதிவாளருமாகிய

**செல்லையா தியாகராசா**

அவர்கள் 03-12-2004 இல் எம்மைப் பிரிந்து விண்ணுலகம் சென்ற செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்க பணியாளர், சிக்கன சேமிப்பு கடனு.கூட்டு.சங்க நிர்வாக உறுப்பினர்களும், அங்கத்தவர்களும்.

(26-19-44) (சி-39718)



## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 02 - 1969



உதிர்வு 09 - 12 - 1989

**செல்வி சங்கரப்பிள்ளை தேவசாந்தி**

(சாந்தி)

திதி: 08-12-2004

பதினைந்து ஆண்டுகள் பறந்தோடிப் போனாலும்
பதறிய நெஞ்சங்கள் இன்னும் ஆறவில்லையே சாந்தி!
சிதறிய எண்ணம்போல் உன் நினைவுகள் சிதறியே போகாமல்
என்றும் எம் நெஞ்சில் ரணமாய் வலிக்கின்றதே!

கைதடி மேற்கு,
கைதடி.

(39319)(26-19-44)

- குடும்பத்தினர்.



## ஆத்மசாந்திக்கிரியை அழைப்பு

தோற்றம் 31 - 05 - 1926



மறைவு 20 - 11 - 2004

**திருமதி அன்னலட்சுமி மாணிக்கம்**

(செல்வநாயகம்)

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (08.12.2004) புதன்கிழமை காலை கீரிமலையிலும், வீட்டுக் கிரியைகள் 10.12.2004 வெள்ளிக்கிழமை இல்லத்திலும் நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்விடம்:
கோயில் குடியிருப்பு, 2ஆம் ஒழுங்கை,
கைலாயபிள்ளை வீதி, சாவகச்சேரி.

தொ.பே.: 0777 852077
- 0777 6171545.

மகன் : மா.குலேந்திரன்,
மருமகன் : க.உமாமகேஸ்வரன்.

(39317) (43-19-44-26)


## கலந்துரையாடல்

வலி.கிழக்கு,டிசெ.8

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம மட்டத்திலான சுற்றாடல் குழுவின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வலி.கிழக்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (3-180)

## கல்வித் திட்ட அபிவிருத்திச் செயலமர்வுகள்

2006ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரிவு மூலமான பிரவேசத்தினூடாக கல்விக்கான திட்ட அபிவிருத்தி தொடர்பான செயலமர்வொன்று வலிகாமம் கல்வி வலயத்தில் இன்று முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்ளவேண்டுமென வலிகாமம் வலயத் திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர் கா.சந்திரபாலன் கேட்டுள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மனைப்பொருளியல்கூட மண்டபத்தில் இன்று தெல்லிப்பழை கோட்டத்தினருக்கும், நாளை உடுவில் கோட்டத்தினருக்கும், நாளைமறுதினம் சங்கானைக் கோட்டத்தினருக்கும், 11ஆம் திகதி சண்டிலிப்பாய்க் கோட்டத்தினருககுமான செயலமர்வுகள் நடைபெறும். (3-152)

## மாணவர் அமைப்பு உதவி

வடமராட்சி,டிசெ.8

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சார வசதிகளற்ற மீள்குடியேற்ற கிராமங்கள், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மாணவர்களின் இரவுநேரக் கற்றல் வசதிகருதி பெற்றோல்மாக்ஸ் விளக்குகளை தமிழீழ மாணவர் அமைப்பு வழங்கியுள்ளது. (ஐ-173)

## விளக்கக் கூட்டம்

திறந்த பல்கலைக்கழகத்தினூடாக ஜி.சீ.ஈ. சாதாரணம், உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கான டிப்ளோமா பட்டம், பட்டப்பின் படடம், கலாநிதிப் பட்டம் என்பவற்றைப் பெறக்கூடிய தான விளக்கக்கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு வலிகாமம் தென்.மேற்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளரும் கல்விநெறி இணைப்பாளருமான செ.ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் கலந்துகொண்டு விளக்கஉரை நிகழ்த்துவார்.

வலிகாமம் தென்.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் போதிய தொடர்பாடல் இன்மையால் படித்த இளைஞர், யுவதிகள் பலர் உயர்படிப்பு பயில்வதற்கு தகுதிபெற்றிருந்தும் அவற்றைப் பெறமுடியாதிருக்கின்றனர்.

இக்குறைபாட்டினை நீக்குவதற்குரிய வேலைத் திட்டங்களை பிரதேச சபை திட்டமிடல் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. (3-152)


**London Laguage School**

Geographical Information System (GIS)

Geographical Students, Surveyors, civil engineers, Project Officers, database Officers, info officers

பதிவுகள் நடைபெறும்.

774, Hospital Road, Jaffna.

Tel. 077 - 6176383.

(39335)(26-19-44)


## அதிபர் கூட்டம்

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில் கல்விக் கோட்ட பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் 2005ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள், பாடசாலை மாணவர் அனுமதி, இலவச பாடநூல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-152)

# சீருடைத்துணி விநியோகம் மழையால் தாமதமாகின்றது

கொழும்பு,டிசெ.8

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கு சீருடைத் துணி விநியோகிப்பது மழை காரணமாக தாமதமடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள வலயக் கல்விப் பணிமனைகளுக்குச் சீருடைத் துணிகள் அனுப்பும் பணிகள் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டன என்று கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தில்லை நடராஜா தெரிவித்தார். நாட்டின் 92 வலயக் கல்விப் பணிமனைகளில் 60வீத மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 வலயக் கல்விப் பணிமனைகளுக்கான சீருடைத் துணிகள் அனுப்பிவைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-6)

# பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அரசுக்கு அதிக அக்கறை

### பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.8

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறையாகவுள்ளது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்:

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாராக உள்ளது. இந்தப் பேச்சுக்களில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை அடங்கலாக முக்கிய விவகாரங்கள் பற்றி ஆராயப்படும்.

எனினும், எந்தவொரு நிலைமையினையும் எதிர்கொள்வதற்கு வசதியாக முப்படைகளும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் - அவர் தமதுரையில் கூறினார். (எ-6)

## பாடசாலையில் பெயர்ப்பலகை திரைநீக்கம்

நல்லூர்,டிசெ.8

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ஒளிவிழா, பெயர்ப் பலகைத் திறப்பு விழா என்பன கடந்த சனிக்கிழமை வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவுப்பகுதி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் பெயர்ப் பலகையைத் திறந்துவைத்தார். (ஐ-111)


## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தினால் நவம்பர் 22 முதல் 30 வரையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த புத்தக விற்பனையை பொதுநிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573.

(C/39459) (42-19-44-26)



## வாழ்த்துகின்றோம்



J/109 பிரிவின் கிராமசேவையாளரும் எமதுநண்பி கார்த்திகாவின் தந்தையுமாகிய

**திரு. சி. இலட்சுமிகாந்தன்**

அவர்கள் 8.12.2004 அன்று தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுவதோடு, 9.12.2004 அன்று தனது 60 ஆவது அகவையையும் பூர்த்தி செய்யும் அத்தருணம் மேன்மேலும் பல்லாண்டு காலம் இல்லாளுடன்கூடி இன்பமுடன் வாழ அன்பாக வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்,
ரமணன்,விஜிருகுல்,பிரபா.
சஜிவந்தி,ராஜி,காயா,
(2ம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்)



## உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்க...

"பட்டப் படிப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்துகொள்ளுங்கள்.

காலம்: 09.12.2004
இடம்: நாவலர் மண்டபம், யாழ்ப்பாணம்
நேரம்: பிற்பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை.




**Dr.M.G.R.**
**Deemed University**

OFFSHORE CAMPUS INFORMATION AND ADMISSION CENTRE

No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840.

(C/39455) உதயன் Graphics

# பொருளாதார நெருக்கடியிலும் கூத்தை வளர்க்கும் பெண் அண்ணாவியார்



**"எனது தந்தையார் கூத்துக்களை நடத்தும் அண்ணாவியார் ஆவார். இவரின் நாட்டுக் கூத்துக்களில் எட்டு வயதில் நான் நடித்துள்ளேன். அதனைத் தொடர்ந்து பல நாட்டுக் கூத்துக்களிலும் நான் நடித்துள்ளேன். அண்ணாவியாராக எனது 35ஆவது வயது முதல் செயற்பட்டு வருகின்றேன்."**

- இவ்வாறு யாழ். மாவட்டத்தின் முதல் பெண் அண்ணாவியாரான கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த திருமதி யோசேப்பின் திரேசம்மா கூறுகின்றார்.

தற்போது 74 வயதைக் கடந்து மிகவும் நெருக்கடியான பொருளாதார நிலையில் இருக்கின்றபோதிலும் அவரின் நாட்டுக் கூத்தின் மீதான பாசமும் அவற்றை மேடையேற்ற வேண்டும் என்பதிலுள்ள ஆர்வமும் சற்றும் குறையவில்லை.

தற்போதும்கூட நாட்டுக்கூத்தை மேடையேற்றுவதற்கான முன் முயற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றார். யாழ்ப்பாணம் தமிழ் கொன்வென்ரில் தான் கல்வி கற்றதாகவும் கூறிக்கொண்டார்.




தொடர்ந்து அவர் கூறுகையில்:

மத்தேஸ் மௌரம்மா என்ற நாடகத்தில் இந்து மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியமைக்காக மன்னனினால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்படும் பாத்திரத்தை ஏற்று நடித்தேன். அதற்காக நடிகர்களுடைய பாராட்டைப் பெற்றேன். இப்பாத்திரத்தைத் திறம்பட செய்தமைக்காக 'இசைக் குயில்' என்ற பட்டத்தை அன்று நாட்டுக் கூத்துக்களை நடத்திவந்த கிறகரி நாடகக் குழுவினர் வழங்கிக் கௌரவித்தனர்.

முதல் தடவையாக நடிப்புக்கு முழுக்கிட்டு விட்டு ஜெனோவா என்னும் நாட்டுக்கூத்தை 72ஆம் ஆண்டில் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினேன்.

அன்று ஆட்சிப் பீடத்தில் இருந்த கல்வி கலாசார அமைச்சர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கல்வி கலாசார அமைச்சினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன் - என்று கூறினார்.

இவர் ஜெனோவா எஸ்தாக்கியார், தியாகராகம், கிறிஸ்தோப்பர், மனம்போல் மாங்கல்யம், மத்தேஸ்மௌரம்மா, நளன் சரித்திரம், புனிதவதி, திசை இராகங்கள், யூதா தேயு, சங்கிலியன் போன்ற நாடகங்கள், கூத்துக்கள் என்பவற்றைச் சிறந்த முறையில் நெறியாள்கை செய்துள்ளார்.

தனது தந்தையாரான அண்ணாவியார் சந்தியா அந்தோனிப்பிள்ளை அன்றைய காலத்தில் நாட்டுக்கூத்தில் சிறந்த அண்ணாவியராக இருந்தார். அவர் மேடையேற்றும் கூத்துக்களில் குறிப்பிடத்தக்க பாத்திரங்களை இவர் ஏற்று நடித்துள்ளார்.

தந்தையாரின் பாதையில்தான் தாலும் நாட்டுக் கூத்துக்களையும், நாடகங்களையும் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

அன்றைய நாட்டுக்கூத்து வடிவத்தில் இருந்து சற்று மாறுபட்ட போக்கை இவர் எனது நாட்டுக்கூத்துக்கள் மற்றும் நாடகங்களில் ஏற்படுத்தியுள்ளார். அதாவது, நாட்டுக் கூத்துப் பாதையில் இருந்து சற்றுப் புதிய விடயங்களையும் இணைத்தே அதனைக் கொண்டு செல்கின்றார். இது பற்றி அவர் கூறுகையில்:

இன்றைய நடிகர்கள் வித்தியாசமான ரசனையுடையவர்கள். இந்த வகையில், ரசிகர்களின் மனநிலையைப் புரிந்து நடனங்களையும்கூட சிலவற்றுள் இணைத்துக்கொண்டு செல்கின்றேன். நாட்டுக்கூத்தில் நடனங்களுக்கு இடம் கிடையாது.

எனக்கென எனது சுற்றுவட்டத்தில் இன்றும்கூட ரசிகர்களும், ஆர்வலர்களும் இருக்கின்றார்கள். எனது அயலவர்களின் அனுசரணையுடன் தற்போதும்கூட ஜெனோவா என்ற நாடகத்தை மேடையேற்றுவதற்காகப் பழக்கிக் கொண்டு இருக்கிறேன்.

இளைய தலைமுறையைப் பொறுத்த வரையில் நாட்டுக் கூத்து, நாடகங்கள் போன்றவற்றை நடிப்பதில் ஆர்வங்காட்டும் தன்மையும் ரசிக்கும் தன்மையும் காணப்படுகின்றது.

இத்தகைய ஆர்வம் உடைய இளைய தலைமுறையினருக்கு வழிகாட்ட வேண்டியது எம்போன்ற அண்ணாவிமார்களின் கடமையாகும். இளைய சந்ததியினரை இந்த நாட்டுக் கூத்தின்பால் வைத்திருப்பதன்மூலமே எதிர் காலத்திலும்கூட நாட்டுக்கூத்தைக் காப்பாற்ற முடியும். இல்லையேல் குறிப்பிட்ட காலத்தில் அழிந்துபோகும் நிலைமை காணப்பட முடியும்.

நாட்டுக்கூத்தை நடத்துவதற்குப் பெருமளவு பணம் செலவு செய்யப்பட வேண்டியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பெருமளவு பணத்தைச் செலவு செய்து 'நாட்டுக்கூத்தை நடத்துபவர்கள் எண்ணிக்கை அருகிக் கொண்டே வருகின்றது. என்னைப் பொறுத்த வரையில் தற்போது பழக்கும் ஜெனோவா நாடகத்திற்குக் கூடப் பணத்தேவை உண்டு.

அதற்கு வேண்டிய உதவிகள் சமூகத்தில் இருந்துகிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறேன். கடந்த காலத்தில் நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களில் நடித்தமை மற்றும் அண்ணாவியாராக இருந்தமை போன்றவை காரணமாக என் மக்களிடத்தில் எனக்கு மதிப்பும் உண்டு.

**செவ்வி: என்.எம்.ராஜா**

எனது சேவைக்கும் நடிப்புக்கும் திருமறைக் கலாமன்றத்தினாலும்கூட பாராட்டப்பட்டுள்ளேன். இளைய தலைமுறையினருக்கும் திருமறைக் கலாமன்றத்தினர் கூத்து நாடகத்திற்கு வழி காட்டிவருகின்றார்கள். இளைய தலைமுறையினர் நாட்டுக்கூத்து வழக்கில் இருந்து விலகிச் செல்கின்றார்கள். இதற்குப் புதிய உத்வேகத்தை இளைய தலைமுறையினரால்தான் ஏற்படுத்தமுடியும்.

எனக்குப் பின்னர் எனது பரம்பரையில் இதனை எனது பிள்ளைகள் எடுத்துச்செல்வார்கள் என்று நான் எண்ணவில்லை. அவர்களிடம் நாட்டுக் கூத்தின் மீது விருப்பமும் அபிமானமும் இருக்கின்ற போதிலும் அவர்கள் இதனைச் செயற்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை - என்றார்.

இவ்வாண்டில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்பட்டுள்ளார்

அந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதனை அவர் பெரும் பேறாகக் கருதி மனநிறைவுடன் கூறிக்கொள்கின்றார்.

இத்துடன், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் மெற்றாஸ்மெயிலையும் அவர் நாட்டுக்கூத்துக்கும் கலைஞர்களுக்குமாக ஆற்றும் சேவையையும் பாராட்டவும் தவறவில்லை. ✳

## ஒற்றுமைக்கான மக்கள் அரங்கு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் 2ஆம் வருட மாணவர்கள் தமது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான அரங்க செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்காகப் பதினொரு பேர் கொண்ட குழுவாக இணைந்து, துறைத்தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் வழிநடத்தலில், தமக்கான தயார்ப்படுத்தல்களையும், அறிதல்களையும் பெற்றுச் செயற்பட்டு வருகிறார்கள்.

இதன் முதற்கட்டமாக யாழ். நல்லூர்க் கோட்டத்திற்கு உட்பட்ட உயர்தரப் பாடசாலைகளிலும், இப்பிரதேசத்திற்கு உட்பட்ட கிராமங்களிலும், அரங்கச் செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதன்போது சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என ஒன்றுதிரண்டு, தமது மௌனங்களைக் கலைத்து, இக்குழுவினருடன் இணைந்து கைகளைத் தட்டிப் பாடல்கள் பாடுவதுடன், அரசு, சர்வதேச சமூகம் பற்றிய தமது கோபங்களைத் தெரிவிப்பதுடன், கைகளை உயர்த்திக் கோஷங்களை எழுப்புவதன் மூலமும், உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றனர். கணிசமான இளைஞர்கள் இக்குழுவினருடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், இவ்வரங்கச் செயற்பாடுகள் ஏனைய பாடசாலைகளிலும், கிராமங்களிலும் நிகழ்த்தப்பட்டு ஒன்றிணைந்த மக்கள் அரங்காக இவ்வரங்கு வெளிப்படும் வரை "ஒற்றுமைக்கான மக்கள் அரங்கச் செயற்பாடுகள்" தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

**யாழ்.பல்கலைக்கழகம்,**
**நுண்கலைத்துறை.**

## மேலைநாட்டு இசைக்கலைஞர்கள் வரிசையில்...

### மொஸார்ட் (1756 - 1791)

மொஸார்ட், ஆஸ்திரியாவில் சல்ஸ் பர்க் கிராமத்தில் 1756இல் பிறந்தார். இவரது தந்தை பெயர் லியோ போல்ட், தாயார் பெயர் அன்னா மரியா என்பதாகும். இவரது தந்தையார் அரசவைக் கலைஞராக விளங்கினார். மொஸார்ட் தமது மூன்றாவது வயதிலேயே இசை கற்கத் தொடங்கினார். இவரது சகோதரியும் சிறந்த இசைக் கலைஞராவார்

இவர் தனது ஐந்தாவது வயதிலேயே மொஸார்ட் மைனூட்ஸ் (Minutes) எழுத ஆரம்பித்தார். ஒருநாள் இவர் பியானோ கொன்சாட்டோ எழுதியதைப் பார்த்த இவரது தந்தையார் வியப்படைந்து அவரைப் பாராட்டினார்.

தனது புதல்வனை இறைவன் தந்த பரிசு என எண்ணி அவரின் திறமைகளை மேலும் வளர்ப்பதற்காக ஐரோப்பாவிற்குச் சென்றார். மொஸார்ட் தமது ஏழாவது வயதிலேயே வியன்னாவில் வயலின் வாசித்துப் புகழ்பெற்றார். இவருடன் இவர் சகோதரியும் வயலின் வாசித்துப் புகழ் பெற்றார். இவர்கள் இருவரும் லண்டனில் பிரபலமாகிப் புகழ்பெற்றனர். பல தடவைகள் மூன்றாம் ஜோர்ஜ் மன்னன் மற்றும் அரசியார் கரோல்ட் முன்பும் வாசித்துப் புகழ் பெற்றனர். தனது பன்னிரண்டாவது வயதில் இரண்டு நாடகங்களை இயற்றினார். அவை (La Fintasemplica, Bastien Bastiene) என்பனவாகும். இவர் மிலன், ரோம், இத்தாலி போன்ற இடங்களுக்குப் பிரயாணம் மேற்கொண்டு பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். இத்தாலியில் இருக்கும்போது மூன்று சிம்பனிகளை (Symphony) இயற்றினார். இதனால் (Phil Harmonic Academy) யின் உறுப்பினரானார்.



இவர் மிலன் என்னும் நகரில் இருக்கும் போது (Ascancoin Alba, Lucio Silla) போன்ற இசை நாடகங்களை இயற்றிப் புகழ்பெற்றார். மியூனிச் நகரில் இருக்கும்போது சிரிப்பு நாடகமாகிய (La Pinta Giardini Era) என்னும் இசை நாடகத்தை எழுதினார். சால்ஸ்பர்க் நகரில் பியானோ கொன்சர்டோஸ் (Piano Concertos) களையும் ஆர்கன் (Organ) இசைக் கருவியில் வாசிக்கக் கூடிய பாடல் களையும் மிகப்புகழ் வாய்ந்த ஹவ்னர் செரனேட்டையும் (Haffner Sernade) எழுதி னார். பாரிஸில் இருக்கும்போது ஒரு சிம்பனி யையும், லெஸ் பெற்றிட்ஸ் ரின்ஸ் (Let Petits Riens) என்னும் பலேயையும் இயற்றினார். இவர், தமது 26 வயதில் திருமணம் செய்து கொண்டார். இவரது புகழ்பெற்ற இசை நாடக மாகிய மரீஜ் ஒப்பிகாரோ (Marriage Of Figaro) ஐ 1786இல் எழுதினார். இதைத் தொடர்ந்து (Don Giovanni, Cosifan Tutte) போன்றவற் றையும் எழுதினார்.

இவர், 1791இல் மரணச் சடங்கிற்குப் பாடப் படும் இசையை எழுதியபோது, தனது சுகவீனத்தையும் பொருட்படுத்தாது எழுதத் தொடங்கினார். இதை அவர் எழுதும்போதே இது தனக்காக எழுதப்பட்டதோ என எண்ணிப் பயந்தது போன்றே இதை எழதி முடிக்கும் முன்பே இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கினார். மொஸார்ட் பல இடங்களுக்குச் சென்று இசை பரப்பிய சிறந்த கலைஞராவார். இன்றும் இவர் புகழ் மேலை நாடுகளில் போற்றப்படுகின்றது எனலாம். ✦

## இசை மொழிகள்

☆ காதலின் இரை இசையாக இருப்பின் இசைத்திடுக, திகட்டும் வரை இசைத்திடுக, காதல் பசி பிணியாக மாறி மடியும் வரை நிறையவே அளித்திடுக.
- வில்லியம் ஷேக்ஸ்பியர்.

☆ புலன்களால் நுகரும் தீங்கற்ற இன்பம் இசை ஒன்றே
- டாக்டர் ஜான்சன்

☆ நாணலிடை ஊடுருவும் காற்றிலும் இசை உண்டு;
சீறிப் பாய்ந்திடும் சிற்றோடையிலும் இசை உண்டு;
காது கொடுத்துக் கேட்டால் அண்ட சராசரங்கள்
அனைத்திலும் இசை உண்டு. - பைரன்

☆ வானுற வளரும் தமிழிசை முன்னே
மாநிலம் வணங்கிட வேண்டும்
தேனுறும் தமிழர் திருவிசை முழக்கில்
தேவர்கள் நடமிடவேண்டும்.
- கவியோகி சுத்தானந்த பாரதியார்.

**பரத நாட்டிய விதி**

கைகள் எங்கே செல்கின்றனவோ - அங்கே
கண்கள் செல்ல வேண்டும்.
கண்கள் எங்கே போகின்றனவோ - அங்கே
மனம் போக வேண்டும்.
மனம் செல்லும் இடத்தை
பாவம் தொடர வேண்டும்.
பாவம் இருக்கும் இடத்தில்
ரசம் பிறக்க வேண்டும்.



சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேநதன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் நிலைய மாணவிகள் துர்க்கை, லக்ஸ்மி, சரஸ்வதி வேடமணிந்து நிற்பதைப் படத்தில் காணலாம். (தென்மராட்சிச் செய்தியாளர்).

# சர்வதேசமனித உரிமைகள் பிரகடனம்

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும், மீளக்குடியமர்ந்தோருக்குமான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டம் கிராமம் தோறும் வினா விடைப்போட்டியை யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நடமாடும் சேவை மூலம் டிசெம்பர் 10ஆம் திகதி அன்று நடத்தத் தீர்மானித்துள்ளது.**

**08.12.2004 தொடக்கம் 10.12.2004 வரையான திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் பிரசுரிக்கப்படும் எல்லாப் பத்திரிகைகளிலும் மனித உரிமை ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்படும் மனித உரிமைகள் சார்ந்த கட்டுரைகளை வாசிப்பதுடன், அது தொடர்பாக நடைபெறவுள்ள வினா விடைப் போட்டியிலும் கலந்துகொண்டு வெற்றியீட்டிப் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டிருக்கிறது.**

**அந்த வகையில் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை விளக்கும் இக்கட்டுரை, வெளியிடப்படுகின்றது.**

மனித குடும்பத்தினைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் அவர்கள் யாவரதும் சமமான பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளதாலும் -

மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும் அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள, காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு இடமளித்துள்ளதாலும் பேச்சுச்சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம் அச்சததிலிருந்தும், வறுமையில் இருந்தும் விடுதலை ஆகியனவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத்தக்க ஓர் உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்துச்சாற்றப்பட்டுள்ளதாலும் -

கொடுங்கோன்மைக்கும் அடக்கு முறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படாமலிருக்க வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகவுள்ளதாலும் -

நாடுகளிடையே நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதனை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளதாலும் -

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சகல மக்களும் பட்டயத்திலே அடிப்படை மனித உரிமைகளிலும் ஒவ்வொரு மனிதப்பிறவியினதும் கௌரவம், பெறுமதி, ஆண், பெண் சம உரிமை என்பவற்றிலுமான தமது நம்பிக்கையை மீளவலியுறுத்தி அதிசுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தத் துணிந்துள்ளனராதலாலும் -

மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான உலக மதிப்பையும் அனுட்டானததையும் மேம்படுத்தலை ஐக்கிய நாடுகள நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்று முழுதாகச் செயல்நிலைப்படுத்த அங்கத்துவ நாடுகள் சூழுறுதி கொண்டுள்ளதாலும் -

இச்சூழுறுதியைப் பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கமிருத்தல் முககியமானதாலும் -

பொதுச்சபை இப்பொழுது -

சமூகத்தின் ஒவவொரு தனிமனிதனும் ஒவ்வொரு சாதனமும், இபபிரகடனத்தை இடையறாது மனத்திலிருத்தி, இவ்வுரிமைகள், சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்குக் கற்பித்தல் மூலமும், கல்வி மூலமும், தேசிய, சர்வதேசிய நடவடிக்கைகள் மூலமும் முயலும நோக்கிற்காகவும் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் மக்களிடையேயும், அத்துடன் தங்கள நியாயாதிக்கத்தின் கீழ்வரும் ஆள்புலத்து மக்களிடையேயும் இவ்வுரிமைகள், சுதந்திரங்கள் முழுமொத்தமாக வலுவும் பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப்பெற்று அனுட்டிக்கப்படுவதை நிலை நிறுத்துவதற்காகவும் சகல மக்களும் நாட்டினங்களும் தத்தமது சாதனையிலக்கின் பொது நியமமாகக் கொள்ளத்தக்க இந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றது.

### உறுப்புரை 1

மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடனும் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்துகொள்ளல் வேண்டும் -

### உறுப்புரை 2

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத்தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர் -

மேலும், எவருக்கும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டிடை அந்தஸ்தின் அடிப்படையில் அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக, தன்னாட்சியற்ற நாடாக அல்லது வேறேதேனும் வகையில் இறைமை மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினும் சரி - வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

### உறுப்புரை 3

வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

### உறுப்புரை 4

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 5

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

### உறுப்புரை 6

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

### உறுப்புரை 7

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள்; பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாபபுக்கு உரித்துடையவர்கள்.

### உறுப்புரை 8

சுதந்திர நாட்டில் அரசமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

### உறுப்புரை 9

ஒருதலைப்பட்ச மனப்போக்கான வகையில் கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் நாடுகடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

### உறுப்புரை 10

தமது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும தமக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான நடுநிலை தவறாத நியாய சபையினால் மேற்கொள்ளப்படும் நீதியான, பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

### உறுப்புரை 11

1. தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விளக்கத்தில் சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளெனக் காண்பிக்கப்படும் வரை, சுத்தவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். அவ்விளக்கத்தில் அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

2. தேசிய, சர்வதேச சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாகக் கொள்ளப்படாதிருந்தபொழுது புரியப்பட்ட அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக எவரும் ஏதேனும தண்டனைக்குரிய தவறுக்கான குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக்குரிய தவறு புரியபபட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டததிலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

### உறுப்புரை 12

எவரும் அவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக ஒரு தலைப்பட்ச மனப்போக்கான தலையீட்டிற்கோ அல்லது அவரது மரியாதை, நனமதிப்பு என்பனவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தப்படலாகாது.

அததகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

### உறுப்புரை 13

1. ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ்செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

2. தனது சொந்தநாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும்,

தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருக்கும் உரிமையுண்டு.

### உறுப்புரை 14

1. வேறு நாடுகளுக்குச் செல்வதன்மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாக அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொடுப்புகள் சம்பந்தமாக இவ்வுரிமை கேட்டுப்பெறப்படலாகாது.

### உறுப்புரை 15

1. ஒரு தேசிய இனத்தவராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

2. எவரதும் தேசிய இனத்துவம், மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதலோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

(தொடரும்)

# சமாதானப் பேரவை ஏற்பாட்டில் ஊடகவியலாளர் குழு வரும்

யாழ்ப்பாணம்,டிசெ.8

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மற்றொரு தொகுதி தென்பகுதி ஊடகவியலாளர்கள் இம்மாதப் பிற்பகுதியில் வடபகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

வடபகுதிக்கு விஜயம் செய்யும் ஊடகவியலாளர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதுடன் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களையும் கிளிநொச்சியில் சந்தித்து உரையாடுவார்கள்.

சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களுக்கு விஜயம் செய்யும் ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்களையும் வடபகுதி ஊடகவியலாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள். இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இதற்கு முன்னரும் ஊடகவியலாளர் குழுவினர் வடபகுதிக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ளார்கள். இம்முறை வருகைதரும் ஊடகவியலாளர் குழுவில் 30 பேர் அங்கம் வகிக்கிறார்கள்.

(ஐ-173)

# போட்டிக்கு ஓடிய தனியார் பஸ் குழந்தையைப் பந்தாடிக் கொன்றது

## தாய் படுகாயம்; கிராண்ட்பாஸில் கொடூரம்

கொழும்பு,டிசெ.8

கொழும்பு கிராண்ட்பாஸில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் மூன்று வயதுக்குழந்தையொன்று அதே இடத்தில் உயிரிழந்தது. படுகாயமடைந்த குழந்தையின் தாயார், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி தாயும் குழந்தையும் பஸ்ஸொன்றில் ஏறுவதற்காக பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்தபோது கொழும்பிலிருந்து மினுவாங்கொடை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் இவர்கள் மீது மோதியுள்ளது. தனியார் பஸ்கள் இரண்டிற்கிடையில் ஏற்பட்ட போட்டியினால் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறும் பொலீஸார் கட்டுப்பாட்டை இழந்த பஸ், பாதசாரிகளுக்கான நடைபாதை மீது ஏறியதாகத் தெரிவித்தனர்.

க்ராண்ட்பாஸ் பபாபுள்ளே பகுதியைச் சேர்ந்தவர்களே விபத்தில் பாதிக்கப்பட்டனர்.

மேற்படி தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஐ-க)

# சிறுமிகளோடு வல்லுறவு: இளம் பிக்கு கைது!

காலி,டிசெ.8

மாத்தறை ஹக்மனை பகுதியில் உள்ள பௌத்த விகாரையொன்றைச் சேர்ந்த 25 வயதான இளம் பிக்கு ஒருவர் நான்கு சிறுமிகளையும், இரு சிறுவர்களையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த சனிக்கிழமை மாத்தறை இன்ஸ்பெக்டர் திருமதி கமகேயின் தலைமையில் சென்ற பொலீஸ் கோஷ்டியினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை பாடசாலைக்குவரும் 12 வயதுக்குட்பட்ட சிறுமியர்களையும் சிறுவர்களையும் இவர் தனது காமப்பசிக்கு இலக்காக்கி வருகின்றார் என மாத்தறை பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டார். இவரது காமவெறிக்கு இலக்கானவர்கள் என்று கூறப்படும் நான்கு சிறுமியரும் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறுவர் இருவரது வாக்கு மூலங்களும் பெறப்பட்டுள்ளன.(ஐ-க)




## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கனகசபை சிவபாலன்

(இலங்கை வங்கி - ஊர்காவற்றுறை)



உறுதியோடு நாமிருந்தோமே
திரும்பி நீ வருவாயென
இதயம் கனக்கிறதே - எமது
இருண்ட விழி நனைகிறதே
காற்றோடு நீ கலந்த சேதி
காலையில் வந்தபோது - எம்
கண்களும் மறந்தது இமைக்க
கனிவான உன் முகமும் தினம்
கலகலப்பான பேச்சும் - இனி
காண்பது தான் எப்போது?

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

**ஊழியர்கள், இலங்கை வங்கி, யாழ்.மேற்தரக்கிளை.**

(39379)(42-16-44)

# சமத்துவம் பேணப்பட்டு பெரும்பான்மை மனோபாவம் அற்றுப்போகவேண்டும்

## பன்முகத்தன்மையும் ஐக்கியமும் ஏற்பட இந்திய அமைச்சர் வெளியிட்ட யோசனை

கொழும்பு,டிசெ.8

சமூகங்கள் மத்தியில் சமத்துவம் பேணப்பட்டு பெரும்பான்மை மனோபாவம் அற்றுப்போகும் நிலையே ஒரு நாட்டின் இன மதச் சார்பின்மையின் அடிப்படையாகும். இத்தகைய மதச் சார்பின்மையின் அடிப்படையிலேயே சமூகங்களிடையே பன்முகத்தன்மையும் ஐக்கியமும் உருவாக்கப்படவேண்டும்.

- இவ்வாறு இந்தியப் பெற்றோலிய இயற்கை வாயு அமைச்சர் மணிசங்கர் ஐயர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவியேற்று பத்து ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெளிவிவகார அமைச்சு மற்றும் தகவல் ஊடக அமைச்சு என்பனவற்றின ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்பத்தில் நடைபெற்ற வைபவத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், 'தெற்காசியாவுக்கு மதச் சார்பின்மையின் அவசியம்' என்னும் தலைப்பில் தொடர்ந்து உரை நிகழ்த்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒரேநாட்டில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் மத்தியில் பிரிவினைகளும் வேற்றுமைகளும் தோன்றுவதற்கான மூல காரணம் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வுகளும் பெறப்படல் வேண்டும். ஒரே நாட்டினைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம் போன்ற ரீதியில் மக்கள் வேறுபடுகின்றனர்.

எனினும், இந்த இன மக்கள் மத்தியில் வேறுபாடு இருப்பினும் தாம் ஒரேநாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு மேலோங்கச் செய்யப்படவேண்டும். வேற்றுமைக்கு மத்தியில் ஒன்றுமையும் ஐக்கியமும் உருவாக்கப்படல் வேண்டும்.

ஒரு தேசத்தில் வாழும் பல்வேறு இனங்கள வித்தியாசமான மொழிகளைப் பேசமுடியும். ஒரு பகுதியில் வாழும் இனமொன்றின் மொழியை, வேறொரு பகுதியில் வாழும் பிறிதொரு இனம் விளங்க முடியாதிருக்கும். எனினும், இனமொழி வேற்றுமையைக் கடந்து அனைத்து இனங்களையும் இணைக்கிற தேச உணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

இவர்கள் மத்தியில் எப்போதும் பன்முகத் தன்மைக்கும் ஐக்கியத்திற்குமிடையே சமநிலை பேணப்படவேண்டும். இந்தச் சமநிலை குலையும்போதே பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

ஒவ்வொரு இனமும் அதற்கே உரிய தனித்துவத்தையும் கலாசார விழுமியங்களையும் பேணிப பாதுகாத்துக் கொண்டு பிற இனங்களுடன் ஐக்கியமாக வாழமுடியும்.

இலங்கை, இந்திய நாடுகளின் கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு என்பனவற்றிடையே சில ஒற்றுமை, வேற்றுமைகள் காணப்படுகின்றன.

பல்லினத் தன்மையில் ஐக்கியம் என்பது அந்நாடுகளுக்கேயுரிய தனித்துவப் பண்பாகும். இந்நாடுகளின் வரலாறு இதனைக் கற்றுத் தருகிறது. தெற்காசிய நாடுகளின் பண்டைய நாகரிகங்கள் கற்றுத்தரும் வேற்றுமையில் ஒற்றுமை என்பதை நடைமுறைப்படுத்துவது இன்றைய மிகப் பெரிய சவாலாகும். இனவாதம், மொழிவாதம், மதவாதம் என்பனவற்றால் இப்பிராந்திய நாடுகளின் இனங்களிடையே பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

பல்லினத் தன்மையை சிறந்தமுறையில் பயன்படுத்தி, நாட்டினதும் பிராந்தியத்தினதும் உறுதிப்பாட்டை கட்டியெழுப்புவது இன்றைய அவசரத் தேவையாகும்.

ஒருநாட்டைப் பொறுத்தவரையில் அதற்குப் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கமுடியும். எனினும், ஒருநாடு என்ற வட்ட வரம்புக்குள் இவ்வினங்கள் தொடர்ந்து நிலைத்திருப்பதை உறுதி செய்வதற்க அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாட்டுத் தலைவர்கள் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

சமூகங்கள் மத்தியில் சமத்துவம் பேணப்பட்டு, பெரும்பான்மை மனோபாவம் அற்றுப்போகும் நிலையே ஒருநாட்டின் இன, மத சார்பின்மையின் அடிப்படையாகும் இத்தகைய மதச் சார்பின்மையின் அடிப்படையிலேயே சமூகங்களிடையே பன்முகத்தன்மையும் ஐக்கியமும் உருவாக்கப்படவேண்டும்.

பெரும்பான்மை, சிறுபான்மை வேறுபாடுகள் களையப்பட்டு ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு அனைவரும் சமமாக நடத்தப்படுவதே மதச் சார்பின்மையின் அடிப்படை அம்சமாகும் என்றார்.(ப-204)

# முழுநாளும் இயங்கிவரும் மூளாய் வைத்தியசாலை

வட்டுக்கோட்டை,டிசெ.8

மூளாய்ப் பகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு வைத்தியசாலை பொதுமக்களின் நன்மை கருதி இருபத்திநான்கு மணிநேரமும் சேவையை வழங்கப் பணிப்பாளர்சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளுக்குப் பின்பு இவ்வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது. மகப்பேறு மற்றும் நோய்கள் தொடர்பான சகல வைத்தியசேவைகளையும் உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் விடுதி மற்றும் சத்திரசிகிச்சை வசதிகளை உள்ளடக்கிய சிறந்த கூட்டுறவு வைத்தியசாலையாக விளங்கிய இவ்வைத்தியசாலை தற்பொழுது புனரமைக்கப்பட்டு இருபத்தி நான்கு மணி நேர சேவையை வழங்கிவருகின்றது.

கண் சத்திரசிகிச்சை இன்னும் ஓரிருவாரங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (10-161)

# வட்டு.மத்தியின் பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை,டிசெ.8

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.சபாரெட்ணசிங்கி தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் வி.சிவஞானபோதனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையினை சங்கரத்தை முருகமூர்த்தி ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா.சதாசிவக்குருக்களும், நினைவுப்பேருரையை யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலனும் வழங்கவுள்ளனர். (3-202)



உலக எய்ட்ஸ் தினத்தை ஒட்டி நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வின்போது பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரனுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அதிகாரி செல்வி கதிரவேலு உதயசுந்தரி கொடி அணிவதைப் படத்தில் காணலாம். (ஐ-3)

# உதயன்

## பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

### 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

நான்கு முஸ்லிம்கள் கடத்தல்; காத்தான்குடியில் பதற்றம்!
தமிழ் தம்பதியர் கடத்தப்பட்டு விடுதலை
28.12.1985

...ட்டக்களப்பில் ஆயுதப்படை அத்துமீறல் நடத்தியது
...கண்காணிப்புக் குழு அறிக்கை
29.12.1985

...தும‌லை, அரியாலை தாக்குதல் ...ண்காணிப்புக் குழுவுக்கு புகார்
29.12.1985

29.12.1985
— மன்னரில் —
நேரடிச் சமர்!
வானத்திலும் தரையிலும் இருந்து சரமாரியான வேட்டுக்கள்!

இனப்பிரச்சினையை தீர்க்க இந்தியா உதவுவது உறுதி
கடைசி நேரம் காங்கிரஸ் தீர்மானத்தில் இணைப்பு
30.12.1985

நிலாவெளியில் 10 பேர் சனியன்று சுட்டுகொலை
30.12.1985

30.12.1985
மன்னர் வெறிச்சோடிக் கிடக்கிறது
★ கண்ணிவெடியில் படைவீரர் மரணம் ★ ஜீப்புகள் கவசவாகனங்கள் சேதம்

மூன்றாவது தினமாக கிளிநொச்சி முற்றுகை
31.12.1985

# ஊர்காவற்றுறை பிரதேச சபை
## மாட்டு இறைச்சிக்கடை, மீன்சந்தை குத்தகை
## மீள்கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் பின்வரும் மாட்டு இறைச்சிக்கடை, மீன்சந்தை என்பன 01.01.2005 தொடக்கம் 31.12.2005 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித்திகதி 14.12.2004

கேள்விப்பத்திரம் 15.12.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன் றைய தினமே பிற்பகல் 12.30 மணிக்குத் திறந்து பரீசிலிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. குத்தகை விவரம் | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கப்படாதது) | கேள்விபத்திரப்பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை. |
|---|---|---|---|
| 01. ஊர்காவற்றுறை மாட்டு இறைச்சிக்கடை இல.02 | 250.00 | 1500.00 | 50,000.00 |
| 02. புளியங்கூடல் மீன்சந்தை | 250.00 | 500.00 | 15,000.00 |

இரா.லோகநாதன்,
செயலாளர்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை.

(சி-39750) (29-43-15-16)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை,
ஊர்காவற்றுறை. 07.12.2004.

---

## வடக்கு ~ கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
## ஆஅவ கடன் இல. 2043 - சிறீ (எஸ்எவ்)
## திருகோணமலை மாவட்ட நிர்மாண வேலைக்கான
# கேள்வி அறிவித்தல் - இல.36

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டத்தின், திட்டப் பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந் தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ. இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01. | MN/CAARP/HS/04 | மன்னார் மாகாண மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் பணிமனை திருத்தவேலை | M5 (கட்டடங்கள்) | 129,000/= |
| 02. | KN/CAARP/RD/01 | உருத்திரபுரம் 0–2 கிலோமீற்றர் இணைந்த வீதிக்கான திருத்தவேலை | M7 நெடுஞ்சாலை | 40,000/= |
| 03. | KN/CAARP/RD/01 | உருத்திரபுரம்2–3.5 கிலோமீற்றர் இணைந்த வீதிக்கான திருத்தவேலை | M7 நெடுஞ்சாலை | 40,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD) மேற்படி ஆ7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருந்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தகாரர்களாகப பதிவுசெய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்து முடித்தவர்களாக இருக்கவேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன், அல்லது உசாவலர்களிடமிருந்து பெறபபட்ட சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத் தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.
   IV. 'ICTAD' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்படடவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின்-புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புதத்கத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை **கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD' 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலையில்** பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகரி 026 - 2227401, மின்னஞ்சல் necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 2004-12-10 இலிருந்து 2004-12-24 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித் தனி உறைகளில் 8ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட திகதி நேரத்தில் கையளிக்கப்படவேண்டும்.
8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் **தலைவர், கேள்விச்சபை, NECORD, 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை** என்ற முகவரிக்கு 2004 மார்கழி 31 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள் விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 மார்கழி 24 முற்பகல் 11.30 இற்கு **NECORD, 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை** என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**கேள்விச்சபைத் தலைவர்,**
**வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,**
**55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை.**

(சி-39743)

---


# UNIT

உலக முன்னணி நிறுவனங்களின் பொருட்களுடன் தரம் மற்றும் தொழிலநுட்ப தொலைநோக்குடன் சகலருக்கும் சலுகைகள் என்ற அடிப்படையில் COMPAQ, DELL, IBM INTEL, PERX மற்றும் ASROCK நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்தி தாயக மண்ணில் அதிநவீன தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் உலகத்தரம் வாய்ந்த கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொழும்பு விலைக்கே யாழில் கிடைக்கச் செய்து 3 வருட முழு உத்தரவாதம் வழங்குகின்றோம்.

விசேட சலுகைப் பொதிகள்

அதிசயிக்கத்தக்க கொழும்பு விலையில்

புதிய Multimedia Pentium IV கணனிகள 39,500/= முதல்

மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

கல்வி நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.

Dialog package/Computer Table Totally Free

அதிசயிக்கத்தக்க சலுகைகள்

PROUDED INDIAN CENTER

Special SATA featured High speed computer

சகல கணனி உதிரிப்பாகங்களும் அதிசயிக்கத்தக்க சலுகை விலையில்

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.


---

# சாவகச்சேரி பிரதேச சபை

01.01.2005 முதல் 31.12.2005 வரை

சந்தை/இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

## மீள்கேள்வி அறிவித்தல்

கடந்த 18.11.2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரம் செய்த விளம்பரத்திற்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

இவை சம்பந்தமான சகல விவரங்களையும் தலைமைப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்
07.12.2004

(சி-39747) (43-15-16)

ந.பாலசந்திரன்
செயலாளர்.

---


# மலிவு! மலிவு! மலிவு!

எமது நிறுவனத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10-12-2004 முதல் 31-01-2005 வரை 10% - 50% வரையான கழிவு விலையில் விற்பனைகள் நடைபெறும். இந்திய புத்தகங்கள் 3மடங்கும் 10% கழிவு வழங்கப்படும். பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியியற் கல்லூரி, பொதுநிறுவனங்கள், நூலகங்கள் முதலியவற்றிற்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன் தரமான உள்ளீட்டுப்பொருள்கள், மூலப்பொருள்கள், அழிபொருள்கள், அலுவலக உபகரணங்கள், அலுமாரி, மேசை, புத்தகறாக்கைகள் என்பனவும் ஒரே கூரையின் கீழ் பெற்றுகொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

இலவச விநியோகம் வழங்கப்படும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
*212, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
(சி-39745) (43-15-16) **T.P.:021 222 5542**


---

# கண்ணீர் காணிக்கை



எமது சங்கத்தின் கடன்பகுதி முன்னாள் முகாமையாளரும், இயக்குநர் சபை முன்னாள் உறுப்பினருமாகிய

## கந்தையா விசுவலிங்கம்

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன் னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,*
*சுன்னாகம்.* (C/39740)(42-15-16)

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.**

---

# மரண அறிவித்தல்

## ஞானப்பிரகாசம் ஆரோக்கியநாதர்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஆரோக்கியநாதர் நேற்று (07-12-2004) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லூர்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பார்பரம்மாவின் அன்புச் சகோதரனும் அற்புதலீலா, சுசிலா (ஆசிரியர்கள், யா/சில்லலை றோ.க.த.க.பாடசாலை), கமலா (ஆசிரியை, யா/ மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம்), விமலா (ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயம்), காலஞ் சென்ற விக்ரர் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன், தாஸன், குலேந்திரன் ஆகியோரின் மாமனாரும் அக்னேசம்மா, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் சனோசனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08-12-2004) புதன்கிழமை பிற்பகல் 3மணியளவில் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கஞ்செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்திரிப்பு. (39403)(26-16-15-43)

தகவல்:
குடும்பத்தினர்.



கிளிநொச்சியில் நடைபெற்ற வெண்பட்டி தினத்தில் ஆண்கள் குழுத் தலைவரும் ஒக்ஸ்பாம் பிரதிநிதியுமான சி.செந்தில்குமரன் கரைச்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திருமதி நித்தியானந்தத்துக்கு வெண்பட்டியை அணிவிப்பதை முதலாவது படத்திலும் பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலர் உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கு வெண்பட்டியை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட அலுவலர்களில் ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : திருவையாறு செய்தியாளர்)

### பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க

# கிளிநொச்சி அலுவலகங்களில் வெண்பட்டி தினம் அனுஷ்டிப்பு

திருவையாறு,டிசெ.8

பெண்களுக்கு எதிரான எல்லா வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவரும்முகமாக உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் 'வெண்பட்டி தினம்' கிளிநொச்சியில் உள்ள சகல அலுவலகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 25ஆம் திகதியை பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் நாளாக ஐ.நா. சபை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தநாள் மற்றும் டிசெம்பர் முதலாம் திகதி வரும் 'எய்ட்ஸ்' தினம் மற்றும் டிசெம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் மனித உரிமைகள் தினம் இவை அனைத்தையும் ஒன்றுசேர்த்து 16 நாள் நிகழ்வு என்ற பெயரில் அனுஷ்டிக்க கிளிநொச்சியில் ஏற்பாடாகியுள்ளது.

1992ஆம் ஆண்டில் கனடா நாட்டில் முதன் முதலாக ஆண்கள் கைகளில் வெண்பட்டி அணிந்து பெண்களுக்கெதிரான வன்முறையை எதிர்ப்பதாக உணர்வலைகளை எழுப்பினார்கள். இதன் பின்பு வருடாந்தம் இந்தப் 16 நாள்களிலும் கைகளில் வெண்பட்டியை அணிவதன் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்ப்பதாகக் கருதப்படும்.

இவ்வாண்டிற்கான நிகழ்வு கரைச்சி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்பின்பு சகல உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. வெண்பட்டியும் அணிவிக்கப்பட்டது.

வெண்பட்டியைக் கைளில் கட்டியிருப்பதன் மூலம் மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுவதுடன் ஒவ்வொரு தனிநபர் நடத்தையிலும் மாற்றம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-393)

## கிளிநொச்சியில் மனித உரிமைகள் தின வைபவம்

பரந்தன்,டிசெ.8

சர்வதேச மனித உரிமைகள் தின வைபவம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உள்ள கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. 'இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைப்பாடு' என்னும் தலைப்பில் கலந்துரையாடலும் இடம் பெறும். (ஐ-352)

# பச்சிலைப்பள்ளியில் வெள்ளம் தேங்க இராணுவ மண் அணைகளே காரணம்

திருவையாறு,டிசெ.8

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக விசேட கலந்துரையாடல் ஒன்று பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் என்.சிவசிறி தலைமையில் திங்களன்று இடம்பெற்றது.

கடுமையான மழை காரணமாக சுமார் 16 கிராமங்கள் வெள்ளப்பாதிப்பிற்குள்ளாகின. மழை ஓய்ந்து இரண்டு நாள்களாகியும் வெள்ளநீர் மட்டம் குறைவடையாததால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

பாதைகள் முற்றாக மூழ்கியதுடன் கிணற்று மட்டத்திற்கு மேலாக நீர் தேங்கியுள்ளதால் குடிநீரும் பெரும் பிரச்சினையாக உள்ளது. பெருமளவான மக்களின் வீடுகள் வெள்ளத்தால் நிரம்பியிருப்பதால் மக்களின் அன்றாட வாழ்க்கையும் கேள்விக்குறியாகியுள்ளது. தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மேற்படி நிலையைக் கருத்திற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு தேங்கியுள்ள நீரை அப்புறப்படுத்த தகுந்த வடிகாலமைப்பை அமைப்பதற்குமாக இக்கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையின் போது அமைக்கப்பட்ட பாதுகாப்பு மேடைகள் நீர் வடிந்தோடுவதற்குத் தடையாக இருப்பதாலேயே வெள்ளம் பாரிய அழிவைத் தந்துள்ளதுடன், மக்களை இடம்பெயரவும் வைத்துள்ளது என்று கூறப்படுகிறது.

உலக உணவுத் திட்டப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் உதவி அரச அதிபர் சரியான திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்கும் பட்சத்தில் 'வேலைக்கு உணவு' வழங்கும் நடவடிக்கை மூலம் சிறந்த வடிகாலமைப்பை உருவாக்கலாம் என்று குறிப்பிட்டார்.

ஆயிரத்து 791 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியிருப்பதால் எ.எஸ்.பி. நிறுவனம் 300 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்களையும் கூரை விரிப்பையும் -

ஒக்ஸ்பாம் நிறுவனம் 80 கூரை விரிப்புக்களையும் 15 நீர்த்தாங்கிகளையும் வழங்க இணக்கம் தெரிவித்தன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-393)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வட்டக்கச்சி,டிசெ.8

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள மேஜர் முரளி முன்பள்ளியில் 2005ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பத்தை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும், விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-203-405)

## மல்லாவி மத்திய கல்லூரிக்கு நூல்கள் அன்பளிப்பு

மல்லாவி,டிசெ.8

மல்லாவி மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது லண்டனில் வசிப்பவருமான கணபதிப்பிள்ளை சிறீதரன் தனது கல்லூரி நூலகத்திற்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்நூலினை இக்கல்லூரியின் லண்டன் பழைய மாணவர்சங்கக் கிளையின் உதவியுடன் அனுப்பிவைத்துள்ளார். (8-203-322)




# மழை பாதித்த குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள் விநியோகம்

திருவையாறு,டிசெ.8

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளப்பாதிப்புக்குட்பட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 111 குடும்பங்களுக்கு உணவில்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

கோரக்கட்டு, உமையாள்புரம், குமரபுரம், பரந்தன் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளம் காரணமாக கடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இவர்களுக்கு கிராம சேவகர்களின் உதவியோடு கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பற்பநாதன் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமாரன் ஆகியோர் கூரைவிரிப்பு, நிலத்திற்கு விரிக்கக்கூடிய பொலித்தீன் ஆகியவற்றை வழங்கினர். (ஐ-204-352)




# கிளிநொச்சி சுகாதார ஊழியருக்கு 'எய்ட்ஸ்' பற்றிய கருத்தரங்கு

உலக எய்ட்ஸ் தினமான டிசெம்பர் முதலாம் திகதி சுகாதார ஊழியர்களுக்கு எய்ட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றியுள்ளனர். இதனால், இதற்கான முடிவுகளை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் பரிசளிப்பு பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கிளிநொச்சி நகர வீதிகளில் தற்காலிக வடிகால்கள்

திருவையாறு,டிசெ.8

கிளிநொச்சி நகரின் பிரதான வீதிகளின் இருமருங்கிலும் தற்காலிகமாக நீர் வழிந்தோடுவதற்கான வடிகால் அமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெய்த கடும் மழையினால் நகரின் பல பாகங்களிலும் நீர்தேங்கி வழிந்தோட முடியாமல் இருப்பதுடன், சுகாதாரத்திற்குக் கேடாகவும் அமைந்துள்ளது.

இதனையடுத்து நீர் அதிகளவு தேங்கும் பகுதிகளுக்கு மண் நிரப்பியும் பிரதான வீதிகளின் இருமருங்கிலும் நீர் வழிந்தோடுவதற்கான தற்காலிக கால்வாய்கள் அமைக்கப்பட்டும் வருவதனால் தொடர்ந்து வழியும் மேலதிக நீர் வெளியே கடத்தப்படுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

நகரில் அமைக்கப்படும் வடிகால்கள் பாதுகாப்பற்ற முறையில் திறந்து காணப்படுவதுடன் கடைகளின் முன்பகுதியிலும் காணப்படுவதால் மக்கள் பலவகை சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகவும் கடைகளின் வாசல் பகுதிகளில் பாதுகாப்பு மேடை அமைக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் - சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-393)

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை 2005 ஆம் ஆண்டுக்கான வியாபார வரி, வியாபார உரிமக் கட்டணம்

### தொழில் மீதான வரி செலுத்துதல்

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள், தனியார் கல்வி நிலையங்கள், வைத்திய ஆலோசனை நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள் போன்ற உயர் தொழில் நிறுவனங்களும் வியாபார வரிகளையும் வியாபார உரிமக் கட்டணங்களையும் தொழில் மீதான வரிகளையும் எதிர்வரும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், தொழில் மாற்றம் செய்பவர்களும், புதிய தொழில் ஆரம்பிப்பவர்களும், தொழில் நிலையங்களை மூடுபவர்களும் உடனுக்குடன் சபைக்கு அறியத்தந்து ஒத்துழைக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றேன். தவறுபவர்கள் மீது மாநகரசபைக் கட்டளைச்சட்டம் 576 பிரிவு 512 இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*02.12.2004*
(சி-39754)(33-16-18-29)

கலாநிதி க.குணராசா,
*மாநகர ஆணையாளர்,*
*மாநகரசபை, யாழ்ப்பாணம்.*

## மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

ஜப்பான் மூளைக்காய்ச்சல் நோய்த் தடுப்பு ஊசி ஏற்றும் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்ட தடுப்பு ஊசி மருந்து பண்டத்தரிப்பு பட்டி உப அலுவலகத்திலுள்ள தாய் - சேய் சிகிச்சை நிலையம், பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை தாய் - சேய் சிகிச்சை ஆகியவற்றில் நாளைமறுதினம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,டிசெ.8

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், கிளைகளின் அபிவிருத்தி ஆகியன பற்றி ஆராய்ந்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று சங்கப் பொது முகாமையாளர் சு.வைரவநாதர் தெரிவித்தார். (ஐ-135)

## ஒளிவிழாக்கள்

குருநகர்,டிசெ.8

யாழ்.சென்.ஜோசப வித்தியாலயத்தின் ஒளிவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.வைத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பாஷையூர் பங்குத்தந்தை வண.பிதா எஸ்.ஸ்ராலின் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (10-204-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்வி வலய நலன்புரிக் கழகத்தின ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை 9:30 மணிக்கு அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் ஒளிவிழா நடைபெறவுள்ளது.

நலன்புரிக் கழகத் தலைவர் நா.வரதராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(10-13)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.8

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் மற்றும் ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் ஒளிவிழா ஏழாலை வடக்கு சி.சி.த.க. பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் ந.சிவகுமாரன் முதன்மை விருந்தினராகவும் ஏழாலை வடக்கு தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த வண.கே.ஜே. தேவசகாயம், குளமங்கால பங்குத்தந்தை அருட்தந்தை பா.இராஜசிங்கம், ஏழாலை வடக்கு இரட்சனிய சேவையைச் சேர்ந்த கட்டன் ஜோன் கிறிஸ்தோப்பர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

வாழ்த்துரையை ஏழாலை சைவமகாஜன வித்தியாலய அதிபர் ந.சுப்பிரமணியம் நிகழ்த்துவார். கலைநிகழ்வுகளும் நடைபெறும். (10)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

*நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள் (09.12.2004) வியாழக்கிழமை காலை 08.02 மணி முதல் 10.42 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்*

எமது திருவருட்செல்வன்
**பரரூபசிங்கம் (ரூபன்)**
அவர்களுக்கும்



எமது திருவருட்செல்வி
**மேனகா (மீரா)**
அவர்களுக்கும்

*சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய இறைவன் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*தங்களை இனிதே வரவேற்கும் :*

திரு.திருமதி துரைசிங்கம்
'கருணை இல்லம்'
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

திரு.திருமதி நாகரத்தினம் (தேசிங்கம்)
த.மு.: 'தேவி வாசம்'
தொம்பை வீதி
(A.G.A. Office Lane),
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
நி.மு.: மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி.

*(இரு வீட்டார் அழைப்பு)*

முக்கிய குறிப்பு : தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்மாற்றப்பட்டு சுன்னாகம் ஐயனார் கோயில் மண்டபத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

(39408)(22-11-16-18-29)

Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6560271 முதல் 6573255 வரை
சீட்டிழுப்பு இல. 91 திகதி 06-12-2004

வெற்றி எண்கள் **3 6 3 1 3 4** சுப்பர் எண் **01**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,33,73,625/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,33,73,625/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 115 | 5,000/- | 5,75,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,145 | 500/- | 5,72,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,464 | 50/- | 5,73,200/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,13,599 | 10/- | 11,35,990/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 121 | 1,000/- | 1,21,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,139 | 100/- | 1,13,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,360 | 20/- | 2,27,200/- |
| மொத்தம் | 1,38,973 | | 55,66,390 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,66,390/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,36,92,350/-**

தொடர் இல. 7525803 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 09 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6561338-6-16
6566709-5-48
6571964-5-85
6568302-8-49
6570979-1-13
6569937-7-39
6564579-2-37
6569663-0-78

**யாழ்ப்பாணம் மாநகரசபை 2005 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரம் வாகன, மிருக வரி உரிமம் பெறுவதற்கான**

## விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் 2005 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தை எதிர்வரும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும். கடந்த காலங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(சி-39746)(29-16-18)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பகிரங்க ஏலவிற்பனை

**யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தில் தறிக்கப்படாத மலை வேம்பு ஒன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.**

| | |
|---|---|
| நாள்: | 15.12.2004 புதன்கிழமை |
| நேரம் : | முற்பகல் 10.30 மணி |
| இடம் : | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

ஏல விற்பனைக்குரிய மரத்தை பார்வையிட விரும்புவோர் 10.12. 2004, 13.12.2004 ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.

ஏலத்தில் வெற்றிபெறுபவர் அதற்கான முழுப்பணத்தினையும் உடனடியாகச் செலுத்த வேண்டும். மரத்தினை அன்றைய தினமே எடுத்துச் செல்லலாம். காலஅவகாசம் தேவைப்படுவோர் சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

மரத்தினை தறிக்கும்போது பல்கலைக்கழக கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதற்காக ரூபா 15,000.00 மீளளிக்கத்தக்க பிணைப்பணமாக செலுத்தவேண்டும்.

(சி-39740)(32-29-16-18)

– துணைவேந்தர்.

## சாவகச்சேரி நகரசபை

01.01.2005 முதல் 31.12.2005 வரை சந்தைக் குத்தகைகளுக்கான கேள்வி அறிவித்தல்

## கால நீடிப்பு

1. கேள்விப் படிவம் வழங்கும் கடைசித் திகதி 14.12.2004
2. கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 16.12.2004 காலை 10.00 மணி
3. கேள்வி திறக்கப்படும் திகதி 16.12.2004 காலை 11 மணி

நகரசபை அலுவலகம்
சாவகச்சேரி.
7.12.2004

(சி-39748)(29-16-18)

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

## அறிவித்தல்

### வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம் வரவு-செலவுத் திட்டம் -2005

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க 171 (எ) பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் 2005 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சுன்னாகம், உடுவில், ஏழாலை அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

இதுசம்பந்தமாக கருத்துத் தெரிவிப்போர் 2004.12.13 ஆம் திகதிக்கு முன் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைச் செயலாளருக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்.

(சி-39749)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கனகசபை சிவபாலன்

(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஞ்சநேயர் ரேடர்ஸ்,
வங்களாவடிச் சந்தி, வேலணை.

சித்திவிநாயகர் பல்பொருள் வாணிபம்
வங்களாவடிச் சந்தி, வேலணை.

(39409)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பிரான்சிஸ் சத்தியரூபன்



அவர்கள் 6.12.2004 திங்கட்கிழமை திடீர் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
மாவட்ட வைத்தியசாலை
தெல்லிப்பழை.

(39412)(38-16-18-29)

## பரிசளிப்பு விழா

கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணி முதல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில, ஆஸ்திரேலிய ஹெய்ற்ரேன் சிட்னி பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் கலாநிதி ஆ.சி.கந்தராசா பிரதமவிருந்தினராகவும் சிறப்புவிருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதனும் கலந்து கொள்வர்.

(எ)


### மணமகள் தேவை

Living Bird Mission பாஸ்டர், டானியல் நவகுமார் சபையைச் சேர்ந்த, ஜேர்மன் நிரந்தர வதிவுரிமையுடைய, 39 வயது, இளமைத் தோற்றமுள்ள மணமகனுக்கு 33 வயதிற்குள் பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு: 077 6154204 (39404) (38-18-14)


## மரண அறிவித்தல்கள்

நயினாதீவு

### திருமதி இராசமணி சின்னம்மா

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராசமணி சின்னம்மா 06.12.2004 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராமச்சந்திரன் தம்பதியினரின் அன்பு மகளும் திரு.திருமதி கந்தப்பர் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணேசு, சண்முகநாதன் (சஞ்சிகா மோட்டோர்ஸ், வவுனியா), சரஸ்வதி (கனடா), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் பரமேஸ்வரி, சகுந்தலாதேவி, கோபாலு (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிறஞ்சனாதேவி, திலகமலர், காலஞ்சென்ற மகாலிங்கம், இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், நிததியானந்தராசா (வர்த்தகர் - கொழும்பு), லெச்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, சவுந்தரம், முத்தையா, செல்லம்மா, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, நாகமணி செல்லமுத்து, ஐயாத்துரை, தங்கம்மா, தையல்முத்து ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.12.2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொழும்பிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27, இராமகிருஷ்ணா வீதி,*
*வெள்ளவத்தை.*
*தொலைபேசி இல.:- 011 5538538*

தகவல்:
இ.சண்முகநாதன்
(சஞ்சிகா மோட்டோர்ஸ்,
வவுனியா).

(39416) (38-18-14)

### திருமதி சின்னம்மா ஐயாத்துரை (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 60/1, வளாக ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஐயாத்துரை அவர்கள் நேற்று (07.12.2004) செவ்வாய்க்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மை தம்பதியின் புதல்வியும் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, மாலைதீவு), காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகலிங்கம் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), காலஞ்சென்ற மகாலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), உருத்திரலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, நாகலிங்கம், மயில்வாகனம், இராமலிங்கம், சீனிப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவரஞ்சனி, சிவபாலினி (கனடா), சிவாகரன் (இத்தாலி), சிவகலாசினி (ஆசிரியை), சிவத்திரன் (ஆசிரியர், யா/இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற ஐங்கரன், ஞானசம்பந்தன் (அதிபர்), காலஞ்சென்ற நீலாகாந்தன், பார்த்தீபன் (கனடா), பிரதீபன் (ஆஸ்திரேலியா), ஜெகதீபன் (Hallo Trust), காயத்திரி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர்), காத்யாயினி (இறுதிவருட மாணவி - வர்த்தகத்துறை, யா/பல்கலைக்கழகம்), அனந்தராஜ் (கனடா), அனுராதா (மருத்துவ பீட மாணவி, ரஷ்யா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் மொராணி நெராமி, முராண், அபிராமி, அனா, சங்கீர்த்தனன், சாம்பவி, சகானா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2004) புதன்கிழமை பி.ப.3.30 மணியளவில் இல. 60/1, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.60/1, வளாக ஒழுங்கை,*
*திருநெல்வேலி.*
*தொலைபேசி இல. 021 4590241*

தகவல்:
குடும்பத்தினர்.

(39420) (38-18-14)

### யோசப் சூசைப்பிள்ளை



மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோசப் சூசைப்பிள்ளை அவர்கள் நேற்று (07.12.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பேர்னபேத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பத்திநாதர் - கனகம்மாவின் அன்பு மருமகனும் அகிலா, ஆனந்தி, சுகந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனும் அன்ரனி, அல்பிறட், ஜஸ்ரின் (வடகடல் நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.12.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*077 6149586*

தகவல்:
மருமகன் ஜஸ்ரின்.

(39428) (38-18-14)

### திருமண வைபவம் பிற்போடல்

நாளை [09.12.2004] வியாழக்கிழமை அளவெட்டி மேற்கைச்சேர்ந்த திரு.திருமதி சிவநேசர் தம்பதிகளின் புதல்வன் ரகுராஜனுக்கும் திருநிறை செல்வி ஜெயவதனாவுக்கும் நடைபெற இருந்த திருமண வைபவம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

தகவல்: திரு.ப.நரேந்திரராஜா ஐயர் (மணமகளின் தந்தை — வவுனியா, சிதம்பரபுரம் தான்தோன்றிஈஸ்வர ஆலய முன்னாள் பூசகரும் விழிசிட்டி வீரபத்திரர் கோயில் தற்போதைய பூசகரும்)

(சா-39759) (38-18-14) கல்வளை — சண்டிலிப்பாய்.


**NEW SCIENCE COLLEGE**
**Jaffna 2006 A/L**
வெப்ப இரசாயனம்
திரு. N.மகேஸ்வரன்
(B.Sc.,Dip.in Ed.,M.Phil.)
புதன், வெள்ளி 5 p.m.
ஆரம்பம்: 08.12.2004
(39413) (38-18-14)

### வேலையாள் தேவை

எமது தொலைத்தொடர்பு நிலையத்துக்குப் பெண் வேலையாள்கள் தேவை.

காரைநகரில் பணியாற்ற ஒருவரும் யாழ். நகரில் பணியாற்ற இருவரும் உடன் தேவை. நேரில்வரவும்.

குமரன் கொமினிக்கேஷன்,
இல.27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4591497.
(C/39711) (42-14-18)

### சதாபொன்ஸ் கல்வி நிலையம்
### மாலுசந்தி – அல்வாய்

09.12.2004 மாலை 3.30 மணிக்கு

- ஆண்டு 3-11 வரையிலான 2005 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகள்.
- ஆண்டு 5 புலமைப் பரிசில் வகுப்புகள்.
- 6,7,8 வகுப்புகளுக்கான ஆங்கில மொழிமூல பாடவகுப்புகள்.

அனைத்தும் ஆரம்பமாகின்றன.
புதிய பதிவுகள் அன்றைய தினமே நடைபெறும்.

இயக்குநர்,
சதாபொன்ஸ் — அல்வாய்.
தொ.பே.:2263206


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.இ.தபானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சிவபாக்கியம் இராமநாதன்** (04.12.2004)

அவர்களின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை,
கொக்குவில்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி மா.மைதிலி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் தம்பிப்பிள்ளை மார்க்கண்டு** (06.12.2004)

அவர்களின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை,
கொக்குவில்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.


**ராஜா** யாழ்ப்பாணம்
5 முதல் 9 வரை சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம் பு.நே. 10.30, இரவு 9.30 மட்டும்.
**SPIDERMAN 2**
ஸ்ரீகாந்த், சிநேகா
போஸ்
பு.நே. 2.30,6.30 மட்டும்.

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
காலை 10.30, 2.30 (பு.நே)
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீல்ஸ)
தினசரி இரவு:6.30, 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் VAN HELSING (மகுல படம்)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
சுரேன், சௌந்தரியா நடித்த
அர்ச்சனா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.) (ரீல்ஸ்)
அடுத்த வெளியீடு சரத்குமார் நடித்த **சத்திரபதி**

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
அஜித் (இருவேடம்), பூஜா நடித்த
**அட்டகாசம்**



தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே)


### கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் வங்கிக்காகவே அயராது உழைத்துவந்தவருமான

**கனகசபை சிவபாலன்**

(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

அவர்களின் மறைவு கேட்டுப் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

(39414) (38-18-14)

### கண்ணீர் அஞ்சலி



எமது வாழ்வுக்கு நல்லறிவு புகட்டி எம்மை நெறிப்படுத்திய அன்பு நண்பரும் உண்மைக்கே உழைத்த உத்தமருமான

**கனகசபை சிவபாலன்**

(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை)

அவர்கள் காலமான செய்தி எம்மை வேதனைக் கடலில் ஆழ்த்தியுள்ளது. அவரது இழப்பு பேரிழப்பாகும். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ தேவி அமிர்தானந்தமயி அவர்களைப் பிரார்த்திக்கின்றோம்.

28, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (39417) (38-18-14)

உயிர் நண்பன்
கி.முத்துக்குமார் (குமார்).

### கண்ணீர் அஞ்சலி



**அமரர் கனகசபை சிவபாலன்**

(உத்தியோகத்தர், இலங்கை வங்கி – ஊர்காவற்றுறை)

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையில் தீவகமக்களின் நலனுக்காக அரும்பாடுபட்டு உழைத்த சிவா அண்ணரின் மறைவுச் செய்திகேட்டு பேரதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் துயரில் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

அம்பாள் ஸ்ரோர்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ்

உரிமையாளர்
வை.ஸ்ரீஸ்காந்தன்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை மார்க்கண்டு

**(இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தரும் வரிமதிப்பீட்டுத் திணைக்கள பிரதம இலிகிதரும்)**



இல.37, கோயில் வீதி, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைகோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் நேற்றுமுன்தினம் (06.12.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை -பொன்னம்மாவின் மருமகனும் சிவலோகநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை, உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) அன்புக் கணவரும் ரேணுகா (ஆசிரியை, அ.மி.த.க.பாடசாலை, ஆனைக்கோட்டை), மைதிலி (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), மஞ்சுளா (முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தற்பொழுது குவைத்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரனின் (குவைத்) மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசம்மா, செல்வரத்தினம், நல்லதம்பி மற்றும் ரோசம்மா (ஆஸ்திரேலியா), சிவபாக்கியம் (கனடா), தர்மாம்பிகை (கனடா) ஆகியோரின் பிரியமுள்ள சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2004) வியாழக்கிழமை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
*போன்: 222 - 5717.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(39427) (38-18-14)

### திருமதி இராசதுரை இரத்தினபூபதி



680/2, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவி இரத்தினபூபதி அவர்கள் நேற்றுமுன்தினம் (06.12.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரஜோதி மற்றும் மோகன்தாஸ் (கனடா), ஜெகதாஸ், இன்பஜோதி, ஞானஜோதி, பகவான்தாஸ், கணணதாஸ் (ஜேர்மன்), பிறேமதாஸ், சுடஜோதி ஆகியோரின் அன்புத் தாயாராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2004) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*680/2, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ஜெகதாஸ்
(பழம் - மகன்).

(39429) (38-18-14)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் பயங்கரவாத சட்டத்தின் கீழ் வழக்கு

## தெஹிவளையில் பொலீஸ் இன்ஸ்பெக்டரைக் கொன்றவருக்கு எதிராக

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் தமிழ் இளைஞர் ஒருவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முதற்தடவையாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் தெஹிவளை பொலீஸ் நிலையத்தில் வைத்து இன்ஸ்பெக்டர் சுனில் தாஹிரைச் சுட்டுக்கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட செல்லத்துரை கிருபாகரன் என்ற தமிழ் இளைஞருக்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தெஹிவளை பொலீஸ் நிலையத்தின் உள்ளே அதிகாரிகள் ஓய்வு அறையில் தூங்கிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரை பிஸ்டலால் சுட்டுக்கொன்றார் என்று கிருபாகரன்மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரைப் பொலீஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தவில்லை. சிறை நீதிமன்றத்திலேயே அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டு வந்தது? கடந்த ஒன்றரை வருடமாக அவர் விளக்கமறியல் கைதியாகவே வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி இந்தக் கொலை வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கிருபாகரனைப் பிணையில் விடுவிக்கக் கோரும் மனு ஒன்றை சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தாக்கல் செய்தார்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் ஒருவரை விளக்கமறியலிலேயே தடுத்து வைத்திருக்கவேண்டுமானால் அந்த நபரை மேல் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்து அனுமதி பெறவேண்டும். இலங்கை தண்டனைச்சட்டக் கோவையின் 126 ஆம் பிரிவின்படி இது கட்டாயமானது. இந்த வழக்கில் அவ்வாறு எந்த அனுமதியும் பெறப்படவில்லை. எனவே, அவரை பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வாதிட்டார்.

ஆனால், இந்த வழக்கு சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி அவருக்குப் பிணை வழங்கக்கூடாது என்று அரச தரப்பு சட்டத்தரணி கீர்த்தி வியனகே வாதிட்டார் . அப்போதே கிருபாகரனுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலையும் அவர் வெளியிட்டார். (எ-க)

## மட்டு. அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

எனினும், இந்தத் தாக்குதலின்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அலுவலகத்தின் முன்புற ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

இந்தக் கைக்குண்டுவீச்சுச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. புலிகளின் அலுவலகங்களுக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படிதாக்குதல்சம்பவம்குறித்த விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டுவருகின்றனர் என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலக அதிகாரிகளும் சம்பவ இடத்துக்குச் சென்று சேத விவரங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்வாரம் ஆரம்பமாகவிருந்தவேளை கடந்த மாதம் 20 ஆம் திகதியும் இந்த அலுவலகத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குண்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யல் பணிபுரியும் போராளிகள் அனைவரும் அங்கு இருந்துள்ளனர். எனினும், அவர்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

முன்னரும் கடந்த 20 ஆம் திகதியன்றும் -தீய சக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இந்த அலுவலகம் இலக்கானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகம் ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திலும் ஸ்ரீலங்கா இராணுவப் படைத்தரப்பின் முற்றுமுழுதான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இச்சம்பவம் குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவித்துள்ளோம் - என்று உள்ளது. (எ-க)

## இந்தியத் தூதரகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிக்கப்பட்ட ஷாருகானின் களியாட்ட நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பிக்கு ஒருவரின் நினைவு தினத்தில் களியாட்ட விழாக்கள் நடத்தக்கூடாது. அப்படிச் செய்வது பௌத்த நாட்டில், பௌத்தர்களின் மன உணர்வைப் பாதிக்கும். இதற்கு இடமளிக்கமுடியாது எனத் தெரிவித்தார் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்கு ஒருவர்.

ஷாருகானின் களியாட்ட விழாவை இரு தினங்கள் பிற்போட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் -

ஜனாதிபதியும், பிரதமரும் இதுதொடர்பில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (எ-க-7)

## நாடாளுமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். நீதிமன்றத்தின் முன்னால் உள்ள ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் இப்படி விமர்சிக்க முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனினும், அதையும் மீறி ராஜித உரையாற்றியபோது சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

இந்தக் களேபரத்தின் இடையே எழுந்து வந்த ஐ.தே.கட்சி எம்.பியான தி.மகேஸ்வரன், அப்போது உரையாற்றிக் கொண்டிருந்த ராஜித சேனாரத்னவின் மேசையில் இருந்த கண்ணாடி கிளாஸ், கோப்பை தட்டுகளை எடுத்துக்கொண்டு செங்கோல் வைக்கப்பட்டிருந்த மேடைக்கு முன்னால் சென்றார். இந்த நாட்டில் செங்கோல் ஆட்சி இல்லை என்று கூறியபடி அந்தக் கண்ணாடிப் பொருள்களை மேசையில் அடித்து உடைத்தார். அவை கலீர் என்ற சத்தத்துடன் சிதறி உடையக் கண்ணாடிச் சில்லுகள் நாலாபுறமும் பறந்தன.

இந்தச் சம்பவத்தினால் சபை ஒருகணம் ஸ்தம்பித்தது.

அச்சமயம் சபைக்குத் தலைமைவகித்த பிரதிச் சபாநாயகர் கீதாஞ்சன் குணவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனை சபையைவிட்டு வெளியேறுமாறு பணித்ததுடன், சபையை 10 நிமிடத்துக்கு ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை மாலை 5.45 மணியளவில் சபாநாயகர் லொக்குபண்டார தலைமையில் கூடியதும், ஆளுங்கட்சிக் கொரடாவான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார். மகேஸ்வரன் எம்.பி. பாரதூரமான செயலில் ஈடுபட்டதால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கோரினார்.

அதை ஐ.தே.கவினர் எதிர்த்தனர்.

மகேஸ்வரன் செய்ததைவிட மோசமான சம்பவங்கள் இங்கு நடந்துள்ளன. சவப்பெட்டியைக் கூட சபைக்குள் கொண்டுவந்துள்ளனர். செங்கோலைத் தூக்கிச் சென்று ஒளித்து வைத்துள்ளனர். அதைவிட, மகேஸ்வரன் ஒன்றும் மோசமாகச் செய்துவிடவில்லை. ஏற்கனவே இந்த விடயத்துக்காக அச்சமயம் சபைக்குத் தலைமை வகித்த பிரதிச் சபாநாயகர் ஓர் உத்தரவு வழங்கிவிட்டார். மகேஸ்வரனை சபையை விட்டு வெளியேறுமாறு அவர் பணித்தார். மகேஸ்வரனும் வெளியேறிவிட்டார். எனவே, இன்னொரு தடவை இதற்காக மகேஸ்வரன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது - என்று வாதிட்டனர் ஐ.தே.கவினர்.

இவ்விடயத்தை இன்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுப்பது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது. (எ-க-7)

## எஸ்.பி.திஸநாயக்காவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.பி. திஸநாயக்கா பொதுக்கூட்டம் ஒன்றில் பகிரங்கமாகக் கூறிய கருத்துக்கள் மேல்நிலை நீதிமன்றுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்துவனவாக அமைந்துவிட்டன என்று பிரதம நீதியரசர் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

அவருக்கு எதிரான குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் சிறை அதிகாரிகள் நீதிமன்ற வாயிலில் வைத்து அவருக்குக் கைவிலங்கிட்டு சிறைச்சாலை வாகனத்தில் சிறைக்குக் கூட்டிச் சென்றனர்.

எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிரான இந்த வழக்கை விசாரித்ததும் தண்டனைத் தீர்ப்பு வழங்கியதும் இலங்கையின் மிக உயர்ந்த நீதிமன்றமான உயர்நீதிமன்றமாகும். இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு இலங்கைச் சட்டத்தில் இடமோ அதற்கு மேல் வேறு மேல்நிலை நீதிமன்றங்களோ இல்லை.

ஆகவே, திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை உடன் ஏற்று அனுபவிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை.

எனினும், தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் பின் கைதுசெய்யப்பட்டு கையில்விலங்கிடப்பட்ட பின்னரும் மலர்ந்த முகத்தோடு கைவிலங்கிடப்பட்ட தமது இரு கைகளையும் உயரத் தூக்கிப் பிடித்துத் தமது ஆதரவாளர்களுக்கு மகிழ்வுடன் கையசைத்தபடியே சிறைச்சாலை பஸ்ஸில் ஏறிச் சென்றார் திஸநாயக்கா.

இலங்கை அரசமைப்பின் 89 மற்றும் 91 ஆம் பிரிவுகளின்படி கிரிமினல் வழக்கு ஒன்றில் ஆறு மாதங்களுக்குக் கூடிய சிறைத்தண்டனை பெறுபவர் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினராகவோ, ஜனாதிபதியாகவோ தெரிவுசெய்யப்பட முடியாது. நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்து வாக்களிக்கவும் முடியாது.

இதன்படி, எம்.பிப் பதவியை திஸநாயக்கா உடனடியாக இழக்கின்றார். தமது இரண்டு ஆண்டு காலச் சிறைத் தண்டனையை முடித்த பின்னரும் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு இந்தத் தகைமையீனம் அவருக்கு இருக்கும். எனவே, அடுத்த ஒன்பது ஆண்டுகள்வரை அவரது அரசியல் வாழ்வு அந்தகாரமாகிவிட்டிருக்கின்றது. அதன்பின்னரே அவர் அரசியலில் செயற்படக்கூடிய சட்டரீதியான தகைமையைத் தகுதியைப் பெறுவார்.

எனினும், இத்தகைய குற்றத் தண்டனைத் தீர்ப்புக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட நபருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளிப்பாராயின் அந்த மன்னிப்பு வழங்கப்படும் தினத்திலிருந்து சிறையிலிருந்து விடுதலையும் அரசியலில் செயற்படும் தகைமையும் அவருக்குக் கிடைத்துவிடும்.

ஆனால், அரசியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பரம வைரியான திஸநாயக்கவுக்கு ஜனாதிபதியிடமிருந்து அத்தகைய பொதுமன்னிப்புக் கிட்டுவது துர்லபமே.

எனினும், ஜனாதிபதி பதவியில் மாற்றம் ஏற்படும் சமயத்தில் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு விடிவு பிறக்கக் கூடும் என அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (எ-க-7)

## அரசுக்குள் பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே அனுசரணையாளர்களின் சமாதானப் பணிகளில் நம்பிக்கை இல்லையென்றும் அவர்கள் இந்த முயற்சிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் ஜே.வி. பி. எழுத்துமூலம் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவரைக் கேட்டிருக்கிறது.

மறுபுறம், நோர்வே அனுசரணையாளர்கள் தமது பணிகளைத் தொடரவேண்டுமென ஜனாதிபதி தரப்புக் கூறுகின்றது.

கூட்டணி அரசுக்குள் இருக்கும் இந்தக் கருத்து முரண்பாடுகள் ஒருபோதும் ஆக்கபூர்வமான பலனைத் தரப்போவதில்லை.

உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தொடுத்திருக்கும் ஜே.வி.பி. போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கேட்கிறது. இந்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய வேண்டுமென உயர் நீதிமன்றம் கூறத் தேவையில்லை. அரசு இந்த ஒப்பந்தம் தேவையில்லையெனக் கருதினால் இதனைக் கிழித்தெறிய முடியும். எனவே, இதனை அரசு தீர்மானிக்க வேண்டும்.

போர்நிறுத்த ஒப்பந்தம் இல்லையென்றால் அமைதி முயற்சிகளுக்கு என்ன நடக்கும்? யுத்தச் சூழ்நிலையே உருவாகும்.

நாடாளுமன்றத்திற்கு வெளியில் மேற்கொள்ள முயலும் சட்டவிரோத செயற்பாடுகளை ஐ.தே.க. எதிர்க்கும்.

தற்போதுள்ள அரசமைப்பை மாற்றிச் சட்ட பூர்வமற்ற முறையில் அரசமைப்பொன்றை அரசு உருவாக்கினால் நாட்டின் நிலைமை என்ன? எந்த அரசமைப்பைப் பின்பற்ற வேண்டியிருக் கும்? முப்படைத் தளபதிகள், அமைச்சர்மார், நீதிபதிமார், அமைச்சுகளின் செயலாளர்கள் எந்த அரசமைப்பின்படி சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவேண்டும்? சர்வதேசத் தொடர்புகள் அற்றுப்போய் ஒரு தோல்வியடைந்த ராஜ் ஜியமாக இலங்கை மாறுவதற்கு இந்த முயற்சிகள் வழிவகுக்கும். அரசு இதைப் பற்றிச் சிந் திக்க வேண்டும்.

அரசின் பாதுகாப்புநிலையை இன்று ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் விமர்சிக்கின்றது. தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு ஐ.தே.க. எப்போதும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இன்று இருப்பது போன்ற நெருக்கடிநிலை என்றும் இருந்ததில்லை - என்றார் பீரிஸ். (எ-க-7)


SINE கல்வி நிறுவனம் உடுவில்
கல்வியாண்டு 2005
தரம் 1 முதல் O/L வரை
SUPER GRADE
ஆசிரியர் குழுவினால்
புதிய வகுப்பு
ஆரம்பம்: 10.12.2004
வெள்ளி 4 p.m.
(39368)

கல்வியாண்டு - 2005
தரம் 1 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்:
09.12.2004 வியாழன் பி.ப. 3.30
★ யாழ். மாவட்டத்திலே சிறப்பிடம் பெற்று விளங்கும், தனித்துவமான நிறுவனம்.
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ். நகர். (39373)

CHEMISTRY Group Classes
DIAS BSc. (Hons) Spl. Chem.)
துரித மீட்டல், வினாவிடை (39366)
104/4, குறுக்கு வீதி, அத்தியடி, ஆனைப்பந்தி, யாழ். நகர்.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். நகர்.
A/L 2006 பௌதிகம், வெப்பவியல்.
By: ஜெயசீலன்
இன்று ஆரம்பம்:
08.12.2004
wed. 3.00 p.m. (39389)

ஐதயால் சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்
கல்வியாண்டு 2005
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் : 10.12.2004
வெள்ளி 3.00 மணி
கணிதம் V.N.பத்மநாதன்
நிர்வாகி. (39424)

Computer Express
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். 0777 - 222422
80%
அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணச் சலுகை வழங்குவதில் பெருமையடைகின்றோம்.
ஆரம்பம்:
Friday - 12.00 p.m.
Saturday - 11.30a.m.
(சி-39733)

Mega Offer
UNIT
கொழும்பு விலையில்
மற்றும் சலுகைகளுடன் கணனிகள்
12ஆம் பக்கம் பார்க்கவும்

விக்னா கல்வி நிறுவனம்
புதிய கல்வியாண்டு 2005
யாழ். நகரில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
தரம் 6 தொடக்கம் O/L வரை
புதிய அனுமதிகளை இன்று தொடக்கம் 12.12.2004 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
★ மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.
★ கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
(39346)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை (பாலகுஞ்சு) செல்வராணி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை (பாலகுஞ்சு) செல்வராணி காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (8.12.2004) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை, பழைய பொலீஸ் நிலையம்.

தகவல்
செல்வராசா (மகன்). (39430)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.